பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு

EELANADU

மலர்: 19 மாசி 26 ரபி அவ்: 18 இதழ்: 27

யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-3-77

## பாக். தேர்தல் பூட்டோ கட்சிக்கு அமோக வெற்றி

இஸ்லாமபாத், மார்ச்,8

பாகிஸ்தான் தேசிய சட்டசபைத் தேர்தலில் பிரதமர் ஜுனப் அலிபூட்டோவின் மக்கள் கட்சிமூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளது.

200 தொகுதிகளில் இதுவரை வெளிவந்த முடிவுகளில் 150க்கும் அதிகமான தொகுதிகளை மக்கள்கட்சி கைப்பற்றியுள்ளது.

9 எதிர்க் கட்சிகளைக் கொண்ட பாகிஸ்தான் தேசிய கூட்டணி 32இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

இதே வேளையில் கலவரங்களைத் தவிர்ப்பதற்காக பொது இடங்களில் மக்கள் கூடுவது

(8-ம்பக்கம் பார்க்க)

# 'சுவிஸ்நாட்டுசமஷ்டி அமைப்பே

# தமிழ் ஈழ அரசியல் அமைப்பு!

## தேர்தல் விஞ்ஞாபனம் இதனைத்தெளிவாக்கும்'

### உடுவில் 'தர்மர்' விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

சுவிற்சர்லாந்து போன்ற அரசியல் அமைப்பே தமிழ் ஈழத்தின் அரசியல் அமைப்பாக இருக்கும். தமிழ்ஈழம் பெறுவதற்கு முன்னரே தமிழ்ப் பிரதேசமும் முஸ்லிம் பிரதேசமும் எல்லை வகுக்கப்படும். தமிழ் ஈழம் கிடைத்ததும் சுவிற்சர்லாந்து போன்று சமஷ்டி அமைப்பில் ''கன்டன்கள்' நிறுவப்படும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் முஸ்லிம் ஐக்கிய முன்னணிக்கும் இடையில் கல்முனையில் கைச்சாத்தான ஒப்பந்தம் குறித்து தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும் உடுவில் பிரதிநிதியுமான திரு. வி. தர்மலிங்கம் விளக்கம் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

''தமிழ்ப் பிரதேசங்களும் முஸ்லிம் பிரதேசங்களும் எல்லை வகுத்துப் பிரிக்கப்பட்டபின் எந்தவிதமான குடியேற்றத் திட்டத்தினலும் இருதரப்புப் பிரதேசங்களும் ஆக்கிரமிக்கப்படமாட்டாது. அதாவது தமிழ்ப் பிரதேசத்தில் முஸ்லிம் குடியேற்றத் திட்டமோ முஸ்லிம் பிரதேசத்தில் தமிழ்க் குடியேற்றத் திட்டமோ ஏற்படுத்தப்படமாட்டாது'' என்றும் திரு. தர்மலிங்கம் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் முஸ்லிம் ஐக்கிய முன்னணிக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கிய அம்சமாக இடம் பெறவிருக்கிறது.

இலங்கைத் தொழிலளர்காங்கிரஸ்தலைவர் திரு.எஸ்,தொண்டமானுடன் கலந்தாலோசனை செய்வதற்கு கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. அமிர்தலிங்கம் சென்றுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நோக்கங்களும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இணைக்கப்படும்.

இம்மாதம்26-ந்தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழர்விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் தேர்தல் விஞ்ஞாபனம் இறுதி வடிவம்பெறும்.

### தமிழ் ஈழத்தின் அரசியல் அமைப்பு

கல்முனையில் கைச்சாத்தான ஒப்பந்தம்பற்றியும் தமிழ்ஈழத்தின் அரசியல் அமைப்புப்பற்றியும் திரு. தர்மலிங்கம் மேலும் விளக்கம் தெரிவிக்கையில் கூறியதாவது:-

சுவிற்சர்லாந்தில் 21 'கான்டன்கள்' இருக்கின்றன. தமிழ் ஈழத்திலும் பல கான்டன்கள் அமைக்கப்படும். அம்பாறை போன்றமாவட்டங்களில்தமிழ் முஸ்லிம் என அரைக்காண்டன்களும் அமைக்கப்படும்.

மாகாண அரசாங்கங்கள் தாம் விரும்பும் சமயத்தில் பிரிந்துபோகவும் உரிமை அளிக்கப்படும்.

தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழலாம்; சிங்களமக்களுடன்

(7-ம் பக்கம் பார்க்க)

### கப்பம் கேட்ட வழக்கு:

## இன்ஸ்பெக்டருக்கு 18 மாத கடூழியமும் 1500 ரூபா அபராதமும்!

யாழ்ப்பாணம், புதன்

கப்பம்கேட்டு கல்லூரி அதிபர் வீட்டில் 10,000 ரூபாவை எடுத்ததாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டருக்கு 18 மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும் 1500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்லூரி அதிபரான பாஸ்கரதேவனிடம் கப்பம்கேட்டு அவரது வீட்டிலிருந்து 10 ஆயிரம் ரூபாவை எடுத்ததாக பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் மார்சல்சில்வா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அபராதம் கட்டுவதற்கு இருமாத தவணை வழங்கியதுடன் அபராதம் கட்டத் தவறினல் ஒவ்வொரு 100 ரூபாவிற்கும் ஒவ்வொருமாத கடூழிய தண்டனை வழங்கப்படுமென்றுநீதவான் தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

எதிரி அப்பீல் செய்வதனல் 3000 ரூபா ரொக்கம் அல்லது 5000 ரூபா உறுதிப்பிணை கட்டவேண்டும் என்றும் நீதவான் தீர்ப்பில் தெரிவித்தார்.

தீர்ப்பளிக்கும்போது நீதவான் கே. ஞானச்சந்திரன் அபிப்பிராயம் தெரிவிக்கையில்

(7-ம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பில் இன்று அடையாள வேலைநிறுத்தம்

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த அகில இலங்கை வர்த்தக ஊழியர் சங்க பண்டத்தரிப்புக் கிளை இன்று அடையாள வேலை நிறுத்தம் செய்யவுள்ளது.

சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும் என்பது உட்பட எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து இந்த அடையாள வேலை நிறுத்தம் நடைபெறுவதாக இச் சங்கத்தின் பண்டத்தரிப்புக்கிளை உபசெயலாளர் திரு. ஜெயவிக்கிரமகுமாரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். நாடுபூராவும் இந்த வேலைநிறுத்தம் இன்று நடைபெறும் என்று அவர் சொன்னர். பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தொழிற்சங்க உரிமைகளை மறுப்பதுதொடர்பான சகல தடைகளையும் நீக்குமாறு கோருவதும் இவர்களின் கோரிக்கைகளில் ஒன்றகும். (ஆ)

### ''கூட்டணி அபேட்சகர் பற்றிய

## கோரிக்கைகள் யாவும் 26 ம் தேதி ஆராயப்படும்''

### கூட்டணி செயல் அதிபர் தகவல்

வவுணதீவு, செவ்.

பல தொகுதிகளிலிருந்தும் அபேட்சகர்நியமனம் தொடர்பான கோரிக்கைகள் கிடைத்திருப்பதாகவும், தூதுக்கோஷ்டிகள் தம்மைச்சந்தித்ததாகவும் செயல் அதிபர்களில்ஒருவரான திரு. அமிர்தலிங்கம் அக்கரைப்பற்றில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். ஆயினும்அவை 26ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் விசேஷ நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் மட்டக்களப்புத் தொகுதி விவகாரம் தொடர்பான தகராறு பற்றி சென்ற மாதம் ஒரு பத்திரிகையில் (ஈழநாடுஅல்ல) வெளியானசெய்தி தவருனது என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைகளுக்கு முரண்படாதவகையில் அதற்கமைவாகப் பிரதமர் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அதில் கலந்துகொள்வதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழக விடுதலைக் கூட்டணியை அழைத்துப் பேசுமாறு பத்திரிகைகளில் வெளியான செய்தி குறித்தும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைக்கு த. வி. கூட்டணி பிரதமருக்குக் கடிதம் எழுதவில்லை எனவும், பேச்சுவார்த்தையை அடிப்படையாகவைத்தே அச்செய்திகள் வெளியானதாகவும் விளக்கமளிக்கப்பட்டது. இக்கூட்டம் த. வி. கூட்டணி உப

(8ம் பக்கம் பார்க்க)

### சங்கானைக்கு ஆதரவு தெரிவித்து

## இன்று சத்தியாக்கிரகம்

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கை கூட்டுறவு சம்மேளன வடபிராந்தியத்திலுள்ள 34 கிளைகளை சேர்ந்த சுமார் 500 ஊழியர்கள் இன்று ஊர்வலமாகச் சென்று யாழ்ப்பாணம் கச்சேரியிலும், பின் கூட்

(7-ம் பக்கம் பார்க்க)

தருமம் தலைகாக்கும்

இலங்கை சைவ அனுதை இல்லம்-கைதடி

## கொடிநாள் 10-3-77

பெருநிதி கொடுத்து பேராதரவு நல்குங்கள் 10-ம் திகதி காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இல்லத்தில் நடைபெறும் விழாவுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ. கந்தையா

பொதுச்செயலாளர்/நற்பொறுப்பாளர்

5628

# யாழ்லயன் களியாட்டு விழா-77

## (யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர், ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.**

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 19—20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்த விதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன், போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

### போட்டி நிகழ்ச்சிகள்

[1[ வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாய ஊதிர்கள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, ]5[ அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பான்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8[ 90 மைல் மரதன் சயிற்கிள் ஓட்டம் வவனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10[ 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, ]13] படகோட்டப்போட்டி, [14[ கராட்டிப் போட்டி, ]15[ யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி. [17] யாழ். அழகு ராணிப் போட்டி.

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18 வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி .....................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்.................................

விலாசம்: ...........................

வயது: ..................

விளையாட்டுப் போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

....................................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

**பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்**

....................................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) (யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11) மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9-ந் திகதிக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

---

## இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின்
பகிரங்க நம்பிக்கைப்
பொறுப்பாளர்
முன்னிலையில்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி ஐயம்பிள்ளை கந்தையா மகள் சிவபாக்கியத்தின் மரணசாதன ரெஸ்ரமேந்து சம்பந்தமான நிருவாகத் தத்துவப்பத்திரம்பெறும் விண்ணப்பம் சம்பந்தமான விடயத்தில்

காலஞ்சென்றவர்
இடையிலும்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி 200, பிரதானவீதி, கந்தையா கெங்காதரம்
விண்ணப்பகாரர்

வலயம்: யாழ்ப்பாணம்

இல. 321
மற்றும்
யாழ்ப்பாணம் சுண்டிக்குளி 200, பிரதான வீதி

1. கெங்காதரம் ரவிசுதன்
2. கெங்காதரம் மகள் மஞ்சுளாவும்
3. கெங்காதரம் மதிசுதன் மேற் கூறப்பட்ட பராயமடையாத 2-ம், 3-ம் எதிர்வாதிகள் தங்கள் பாதுகாவலர் 4-ம் எதிர்வாதி மூலம் வெளிப் படுகிறார்கள். யாழ்ப்பாணம் சுண்டிக்குளி காட்டுக்கந்தோர் ஒழுங்கை.
4. விஞசித்தம்பி கனகசிங்கம்

எதிர்வாதிகள்

1977-ம் ஆண்டு தை மாதம் 11-ந் திகதி 280-ம் பிரிவின் கீழ்ச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியளித்ததின் பேரில் யாழ்ப்பாண நீதிபரிபாலன வலயத்து மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கும் உத்தியோகத்தர் கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்களித்த அதிகாரத்தின்கீழ் கட்டளையிடுகிறதாவது:

(அ) இக்கட்டளை பெறுபவர் அல்லது வேறு எவராவது 1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 10-ந் திகதி அல்லது அதற்கு முன் ஆட்சேபம் தெரிவித்தாலன்றி 1974-ம் ஆண்டு ஆவணி மாதம் 21-ந் திகதி பிரசித்த நொத்தாரிஸ் இ. கோபாலசிங்கம் முகதாவில் 201-ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் அதன் மூலப்பிரதி இப்பொழுது இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டதுமான மரணசாதனம் நிரூபிக்கப்பட்டுள்ளதென்றும் மேற்படி விண்ணப்பகாரர் மரணசாதனம் ஈகை பெறுபவரென்ற வகையில் மரணசாதனம் அணைத்து மரணச்சொத்து நிர்வாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுமென்றும்,

(ஆ) மேலும் இந்நடைமுறை சம்பந்தமாகச் சொல்லப்பட்ட பராயமடையாதவர்களான 2-ம், 3-ம் எதிர்வாதிகளின் பாதுகாவலராகச் சொல்லப்பட்ட 5-ம் எதிர்வாதியே நியமிக்கப்படவிருக்கின்றார் என்றும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை,**
மரணசாதன
அதிகாரப்பத்திரம்
வழங்கும் உத்தியோகத்தர்

1977-ம் ஆண்டு தை மாதம் 11-ந் திகதி. 5633

---

**வியாபாரம்பெருக**
**விளம்பரம் செய்க**

---

1973-ம் ஆண்டின்
44-ம் இலக்க
நீதி நிருவாகச் சட்டத்தின்
283-ம் பிரிவின் கீழ்
மரணசாதனம்
நிரூபிக்கப்பட்டு
அதிகாரப்பத்திரம்
வழங்கப்படுவது பற்றிய

## இடைக்காலக் கட்டளை

**இலங்கைக் குடியரசின்**
**பகிரங்க நம்பிக்கைப்**
**பொறுப்பாளர்**
**முன்னிலையில்**

உடுப்பிட்டியைச் சேர்ந்த கந்தையா செல்லையாவின் மரணசாதனம் விடயமாக.
உடுப்பிட்டி கந்தையா செல்லையா கைம்பெண் இராசம்மா.
விண்ணப்பகாரர்

இல: 322
1. செல்லையா கிருஷ்ணமூர்த்தி, 27, குறெம்வெல் அவெனியூ, நியூமெல்டன், சறே கே. ரி. 3. 6 டி என் இங்கிலாந்து.
2. முருகேசு இராசேந்திரம், இலங்கை செஸ் ரெஜ்னர் லிமிட்டெட், 190, வொக்ஸலேவால் வீதி கொழும்பு 2.
3. பெண் பரமேஸ்வரி, இராசகிரி, உடுப்பிட்டி.

எதிர்வாதிகள்

1977-ம்ஆண்டு தை மாதம் 12-ந் திகதியிடப்பட்ட விண்ணப்பத்தின் முக்கிய கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டதென திருப்தி அடைந்ததன் பேரில் வலய தத்துவப்பத்திர அதிகாரியாகிய கா. கணபதிப்பிள்ளையாகிய நான் அக்கட்டளையின் அறிவித்தலைப் பெறும் எவராவது அல்லது இந்நடவடிக்கையில் அக்கறை உள்ள வேறெவராவது 1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 11-ந் திகதியன்று அல்லது இதற்கு முன்னர் போதிய காரணம் காட்டி ஆட்சேபனை தெரிவித்தாலன்றி 19-1-1949 திகதியிட்டதும் பிரசித்த நொத்தாரிஸ் க. சின்னத்தம்பியால் 2631ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இப்பொழுது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டதுமான மரணசாதனம் நிரூபிக்கப்பட்டதெனவும் மேலே சொல்லப்பட்ட விண்ணப்பகாரரே குறித்த மரணசாதனத்தில் சொல்லப்பட்ட நிறைவேற்றுனர் எனவும் மேற்படி மரணசாதனத்தின் மீதான மரணசாதன அதிகாரப்பத்திரம் சொல்லப்பட்ட விண்ணப்பகாரருக்கே முறைப்படி வழங்கப்பட வேண்டுமென்றும் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி கட்டளையிடுகிறேன்.

1977-ம் ஆண்டு தை மாதம் 12-ந் திகதி.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப்பத்திர அதிகாரி.
5630

---

## வட்டு. எம். பி. வாக்குறுதி

சங்கானை, செவ்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் எச். எஸ். ஸி. ஈ. வகுப்பு அமைப்பது சம்பந்தமாக மேற்படி பாடசாலை பெற்றோர் குழுவொன்று வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராசாவைப் பேட்டி கண்டது.

சங்கானைப்பகுதி மாணவர்கள் மேல் வகுப்பில் கல்விபெற ஏனைய கிராமங்களை நாடி பல தரப்பட்ட கஷ்டங்களுக்கிடையே செல்வதுபற்றி சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக திரு. தியாகராசா எம். பி. வாக்குறுதியளித்தார். (உ)

---

## விளம்பரம்

### விற்பனைக்கு

தெல்லிப்பழையில் மகாஜன கல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்கும் இடையில் 8½ பரப்புக்காணியில் உள்ள பங்களா விற்பனைக்கு இருக்கிறது. வீட்டிற்குப் பின்னால் 6 பரப்புக் காணியும் விற்பனைக்கு இருக்கிறது. பகுதி பகுதியாகவும் கொடுக்கப்படும். தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும். டாக்டர் (திருமதி)A D போல், மெடிக்கல் கிளினிக், முரசுமோட்டை.
5635

---

### காணவில்லை

இரத்தினம் அரியதவம் என்னும் சிறுவனை 5-3-77-ல் இருந்து காணவில்லை. வயது 13 உயரம்3அடி நிறம் கறுப்பு. வட்ட முகம் வெள்ளையங்கி அணிந்திருந்தார். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- க. சின்னையா, திகரை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை அல்லது அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம். 5636

---

**இலங்கைக் குடியரசின்**
**பகிரங்க நம்பிக்கைப்**
**பொறுப்பாளர்**
**முன்னிலையில்**

காலஞ்சென்ற புலோலி மேற்கு இராசரட்டினம்பெண் சிவலட்சுமியின் மரணசாதனமெழுதாத சொத்தின் நிர்வாக விடயமாக.

காலஞ்சென்றவர்

வலயம்: யாழ்ப்பாணம்
இலக்கம் 303

கிராமசபை ஒழுங்கை புலோலி தெற்கு புலோலி சுப்பிரமணியம் இராசரட்டினம்.
விண்ணப்பகாரர்

கல்வளவு புலோலி மேற்கு, பருத்தித்துறை
1. ஆழ்வாப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
2. பெண் அம்மா

பிரதிவாதிகள்

1973-ம் ஆண்டு 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 281-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 1976-11-2 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்திலுள்ள கூற்றுக்கள் முதல் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதின் பேரில் இக்கட்டளை வழங்கப்பெறும் எவராவதுஅல்லது வேறுயாராவது 1977 மார்ச் மாதம் 25-ந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் போதிய காரணம் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்படி விண்ணப்பகாரர் காலஞ்சென்றவரின் புருசன் என்ற முறையில் காலஞ்சென்றவரின் மரணசாதனமெழுதாத சொத்தின் நிர்வாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்கு அவரே தகுதியுடையவர் என்றும் அவ்வண்ணம் அவருக்கே வழங்கப்படுமென்றும்தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கிய அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப்பத்திர அதிகாரி,
யாழ்ப்பாணம்.

1977-02-11.

5631

---

## இராசாவின் தோட்டத்தில் இரங்கற் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். இராசாவின் தோட்டம் வீதியால் இம்மாதப் பிற்பகுதியில் அமரர் ஜி. ஜி. இரங்கற் கூட்டம் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கானஏற்பாடுகளை திரு. எஸ். எம். திருவ்ணசாமி குழுவினர்செய்து வருகின்றனர் (அ)

# மகாத்மாகாந்தியும் பிரதமர் நேருவும்கூட சர்வாதிகாரிகள் என வர்ணிக்கப்பட்டனர்

## தமிழ்நாடு சூறுவளி தேர்தல் பிரசார சுற்றுப்பயணத்தில் மதுரையில் இந்திரா

சென்னை, மார்ச் 8

**இந்திய விடுதலைக்கு வித்திட்ட தேசபிதா மகாத்மா காந்தியும் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமருமான பண்டித ஜவஹர்லால் நேருவும் கூட சர்வாதிகாரிகள் என்று குற்றம்சாட்டப்பட்டனர். அப்படி இருக்கும்போது எதிர்க்கட்சியினர் என்னையும் சர்வாதிகாரிஎன்று கூறுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினர்.**

தமிழ்நாட்டில் சூறுவளி தேர்தல் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுவரும் பிரதமர் திருமதி காந்தி மதுரையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

### முன்னேற்றமா. அழிவா?

சர்வாதிகாரமா; ஜனநாயகமா என்பதல்ல இன்றைய கேள்வி. அமைதியான விரைவான முன்னேற்றமா -அழிவா என்பதே இன்றைய பிரச்னை.

### 20 அம்சத் திட்டத்தை அகற்றுவார்களா?

ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததும் கடந்த 19 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை நீக்கிவிடுவதாக அவர்கள் கூறிவருகின்றனர். 20 அம்சத் திட்டத்தை அகற்றிவிடுவார்களா? ஹரிஜனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களைத் திரும்பப் பெறுவார்களா? வீடுகளை இடிப்பார்களா?

### சகல பிரச்னைகளையும் தீர்க்கவில்லைத்தான்

எமது அரசாங்கம் சகல பிரச்னைகளையும் தீர்க்கவில்லை என்பதுஉண்மைதான். ஆனல் ஏழைமக்களுக்காகத் திறக்கப்பட்டுள்ள கதவு இன்னும் மூடப்படவில்லை.

### தி. மு. க. வை நம்பினேம்

1971-ம் ஆண்டு தி. மு. கவை நம்பி அதனுடன் இணைந்தோம். ஆனல் பின்னர்தான் அதன் உண்மை நிலையை அறிந்துகொண்டோம். தி. மு.



கவும ஏழை மக்களுக்காகப் பாடுபடும் என்று நம்பியே நாம் அக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தோம். ஆனல் ஏழைமக்களின் நலனில் அவர்களுக்கு

## "தி. மு. க.வை நம்பி இணைந்தோம்; நம்பிக்கை வீணாகிவிட்டது"

அக்கறையில்லை என்பதைப் பின்னரே அறிந்துகொண்டோம்.

திரு. கருணாநிதியின் அமைச்சரவை உறுப்பினர் ஒருவரே என்னிடம் வந்து ஹரிஜன நல வாழ்வுக்கென ஒதுக்கப்பட்ட நிதிகள் வேறு பல பணிகளுக்குப் பயன்படுத்தப்படுவதாகப் புகார் கூறியுள்ளார்.

### தி. மு. க. - மொரார்ஜி இணைப்பு விந்தையே

மொழிப்பிரச்னையை முன்னர் திணிக்கமுயன்ற திரு. மொரார்ஜி தேசாயுடன் இப்போது தி. மு. க வினர் இணைந்திருப்பது விந்தைக்குரியது என்றும் பிரதமர் கூறினர்.

### எம். ஜி. ஆர்: பேச்சு

சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் வறுமையை ஒழிக்கவுமே அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய காங்கிரஸுடன் இணைந்தது என்று இக்கூட்டத்தில் பேசிய அ. அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் கூறினர். (இ)

## 1,100 சடலங்கள் மீட்பு

புக்காரெஸ்ட், மார்ச் 8

ருமேனிய பூகம்பத்தில் சிக்குண்டவர்கள் 1,100 பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

4நாட்களின் பின் 9 வயது சிறுமி ஒருத்தியும், பெண் என்ஜினியர் ஒருவரும் நேற்று உயிருடன் மீட்கப்பட்டனர் என்றும் புக்காரெஸ்ட் செய்தி ஒன்று தெரிவித்தது. (இ)

## ஜெயப்பிரகாஷ் கோரிக்கை

பம்பாய், மார்ச் 8

இந்திரா காங்கிரஸுக்கும் ஜனதா கட்சிக்கும் இடையே நேரடிப் போட்டியை ஏற்படுத்தும் பொருட்டு தேர்தலிலிருந்து விலகிக்கொள்ளுமாறு சகல சுயேச்சை அபேட்சகர்களையும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கேட்டுள்ளார்.

பம்பாயில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளா.

பம்பாய் ஆஸ்பத்திரியிலிருந்து நேற்று வெளியேறிய திரு. நாராயண் இன்று பட்ன சென்று தேர்தல் பிரசாரவேலைகளில் தீவிரமாக ஈடுபட்டார். (இ)

## அமைதியான தேர்தலுக்கு தலைவர்கள் உத்தரவாதம்

### சுவாமிநாதன் நம்பிக்கை

புதுடில்லி, மார்ச், 8

நேர்மையான அமைதியான தேர்தல் பெறுவதற்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக சகல அரசியல் கட்சிகளும் தெரிவித்துள்ளன என்று தேர்தல் தலைமைக் கமிஷனர் திரு. பீ. சுவாமிநாதன் இன்று புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நிலைமைகளை நேரில் கவனிக்கும் பொருட்டு 13 மாநிலங்களில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு அவர் புதுடில்லி திரும்பியுள்ளார்.

தேர்தல் ஏற்பாடுகளையும் நுணுக்கமாக திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் 30 லட்சம் ஊழியர்கள் தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## இந்தியத் தேர்தல் அரங்கு

### காங்கிரஸ் அ அ. தி. மு. க. வுடன் ஏன் இணைந்தது?

எம். ஜி. இராமச்சந்திரனின் அ.அ.தி.மு.க. பிராந்திய மனப்பான்மையைக் கைவிட்டு தேசிய அணுகு முறையை பின்பற்றி வருவதனலேயே காங்கிரஸ் அ. அ.தி.மு.க. வுடன் இணைந்தது என்று உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. பிரமானந்த ரெட்டி கூறினர்.

### 50 கோடிரூபா காங்கிரஸ் வசூல்

ஆளும் காங்கிரஸ் 'குடியரசு நாள் மலர்' விளம்பரம் என்ற பெயரில் முப்பது கோடி ரூபாவிலிந்து ஐம்பது கோடி ரூபாவரை பல கம்பனிகளிடமிருந்து வசூலித்துள்ளது. இப்பணம் திருப்பித்தரப் பட்டாலே சட்ட பூர்வமாக்கப் பட்ட லஞ்சத்திலிருந்து நாடுதப்பிக்கமுடியும் என்று ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் கூறினர்.

### கருணாநிதி தெலுங்கில் வாக்கு கேட்டார்

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி அரக்கோணம் தொகுதியில் பிரசாரம் செய்கையில் தெலுங்கு பேசும் மக்களிடம் தெலுங்கு மொழியில் வாக்குகளைக் கேட்டாராம்.

### தாறுமாறுன கட்சிக் கூட்டணி அல்ல

ஜனதா கட்சி தாறுமாறுன கட்சிகளின் கூட்டணி அல்ல என்றும் ஜனநாயகத்தில் பூரண நம்பிக்கை கொண்டுள்ள முக்கிய கட்சிகளின் கூட்டமைப்பே அது என்றும் ஜனநாயக கங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் குறிப்பிட்டார்.

## "கட்சி மாற்றத்தை மார்ச் 22வரை ஜனதா ஏற்கும்"

### 20 எ . பி.க்கள் கண்டனம்

புதுடில்லி, மார்ச். 8

கட்சி மாற விரும்புபவர்களை இம்மாதம் 22 ம் திகதிவரை ஜனதா கட்சி ஏற்றுக்கொள்ளும் என்று ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. மேத்தா கூறியுள்ளார்.

திரு. மேத்தாவின் இக்கூற்றை 20 எம். பிக்கள் கண்டித்துள்ளனர்.

22 ம் திகதிக்குள் சகல தேர்தல் முடிவுகளும் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுவதாலேயே ஜனதா கட்சி இவ்வாறு கூறுகின்றது என்றும் இது வாக்காளர்களை அவமதிக்கும் செயல் என்றும் அந்த எம். பிக்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## பஸ் சேவை சீர்கேடு

பருத்தித்துறை, செவ்வாய்

பருத்தித்துறை இ. போ. ச. நிலையத்தில் பல பஸ் வண்டிகள் பழுதடைந்துவிட்டதாலும், இங்கு சேவையிலீடுபட்ட சிலபஸ்வண்டிகள் கிளிநொச்சி, காரைநகர் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டதாலும், பொதுமக்கள் குறிப்பாகப் பாடசாலைப்பிள்ளைகள் மிகுந்த தொல்லைக்கு ஆளாகியுள்ளனர்.

பல பிள்ளைகள் வழக்கத்துக்கு மாருக பஸ்சேவை சீர்கேட்டால் மாலை 6 மணிக்கே வீடு வந்துசேர முடிகிறதாம். (உ)

## நாதஸ்வர வித்துவானுக்கு கௌரவம்

யாழ்ப்பாணம், புதன்

மாவை ஆதீன நாதஸ்வர வித்துவான் திரு. எம். எஸ். சண்முகநாதனுக்கு பொன்னடை போர்த்தி கௌரவம் வழங்கப்பட்டதுடன் "நாதஸ்வர வேணுகான இசைமன்னன்" என்னும் பட்டமும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கடையடிப் பிள்ளையார் கோவில் பூங்காவனத்தின்போது பொன்னடை போர்த்தலும், பட்டமளிப்பும் இடம்பெற்றன.

பொன்னடை போர்த்தி, பட்டமளித்த திரு. லோகநாதன் தமதுஉரையில், "திரு. சண்முகநாதனின் நாதஸ்வர இசை மெய் மறந்து கேட்டு இன்புறும் சக்தி வாய்ந்தது" என்ருர்.

திரு. எஸ். சிவரத்தினமும் பாராட்டுரை நிகழ்த்தினர். (உ)

## கும்பாபிஷேகமும் மூர்த்திகள் பவனியும்

யாழ்ப்பாணம், புதன்

சுன்னுகம் மயிலணி விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமிக்கு இம்மாதம் 21ம் திகதி பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் கிரியா முத்தாமணி சிவஸ்ரீ குஞ்சிதபாத குருக்கள் தலைமையில் நடைபெற விருக்கிறது. இதனையொட்டி இம்மாதம் எதிர்வரும் 11ம் திகதி வெள்ளிக்கிழமைவண்ணை நாச்சிமார்கோவிலடி ஞானவைரவர் சுவாமி கோவிலடியில் இருந்து பரிவாரமூர்த்திகள் சகிதம் புதிதாக உருவாக்கப்பட்ட தெய்வச்சிலைகள் அலங்கார ஊர்தியில் பவனிவரும்.

இம்மூர்த்திகள் 'மில்க்வைற்' அதிபர் திரு.க.கனகராசாவின் உபயமாக அமைக்கப்பட்டுள்ளன. (அ)

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

வடமாகாண அரசாங்க ஓய்வூதியம் பெறுவோர் நலன்புரிச் சங்க வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 20 ம் திகதி யாழ். நூலக மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவரும் இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபருமான திரு. ஏ. தட்சணுமூர்த்தி கூட்டத்திற்கு தலைமை வகிப்பார். (இ)

# ஆபிரிக்க நாடுகளுக்கு சவூதி அரேபியா 100 கோடி டாலர் உதவி

## விடுதலை இயக்கத்திற்கும் உதவும்

கெய்ரோ, மார்ச் 8

ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு சவூதி அரேபியா 100 கோடி டாலரை உதவியாக வழங்கும்.

அரபு – ஆபிரிக்க உச்சி மாநாட்டில் சவூதி அரேபிய வெளிநாட்டமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கெய்ரோவில் நடைபெற்ற முதலாவது அரபு - ஆபிரிக்க உச்சிமாநாட்டுக்கு எகிப்திய ஜனதிபதி அன்வர் சதாத் தலைமை வகித்தார். ஆபிரிக்க நாடுகளுக்கான நிதி உதவி பற்றி சவூதி அரேபிய அமைச்சர் அறிவித்ததும் மாநாட்டுப் பிரதிநிதிகள் பலத்த கரகோஷத்துடன் அதை வரவேற்றனர்.

ஆபிரிக்க விடுதலை இயக்கங்களுக்கு 20 லட்சம் டாலர் உதவி வழங்கப்படும் என்றும் சவூதி அரேபியா தெரிவித்தது.

### மணிவாக்கு

வெற்றி என்பது தானே சித்திக்கும் ஒன்றல்ல; அது ஒரு விளைவு: முன்னேறுவதில் எதுவித மர்மமுமில்லை. சந்தேகம் கொண்டு தயங்கி நிற்காமல் செயல்படுவதும், ஆசைப்பட்டுக்கொண்டு அமர்ந்திருக்காமல் தொழில்புரிவதிலுமே அது தங்கியுள்ளது''.

—லான்டர்

ஈழநாடு
THE EELANADU

# பாகிஸ்தான் தீர்ப்பு

பாகிஸ்தானில் நடந்த பொதுத்தேர்தலில் பிரதமர் ஜனாப் ஸுல்பிகார் அலிபூட்டோவின் மக்கள் கட்சி அமோக வெற்றியீட்டியிருக்கிறது.

இருபத்தொன்பதுஆண்டு கால பாகிஸ்தானின் சரித்திரத்தில் ஒரு சிவில்அரசாங்கத்தின் கீழ் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற்றது இதுதான் முதல்தடவை.

ஜனநாயக ஆட்சியுடன்தான் பாகிஸ்தான் மலர்ந்தது.

பாகிஸ்தானின் சிற்பி காயிதே ஆஸம் ஜின்னாவின் மறைவும் அவரது வலக்கரமாகத் திகழ்ந்த லியாகத் அலிகான் படுகொலையும் பாகிஸ்தானில் பதவிப்போட்டியும்அதிகார ஆசையும் தலையெடுத்தது.

கட்சிகளுக்கிடையில் மோதல் ஏற்பட்டன. சட்டம், ஒழுங்கு சீர்குலைந்தது. குற்றச்செயல்கள் அதிகரித்தன.

விலைவாசிகள் அதிகரித்தன. அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடுஏற்பட்டது. வேலையில்லாத்திண்டாட்டமும் தலையெடுத்தது. இதற்கிடையில் கிழக்குப்பாகிஸ்தான் மேற்குப்பாகிஸ்தான் பிரச்னைகளும் கிளம்பின.

அரசியல்கட்சிகள் இவற்றைப்பற்றிக் கவலைப்படவில்லை.

ஆதிக்கப் போட்டியிலேயே அவைஈடுபட்டிருந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தை இராணுவம் பயன்படுத்திக் கொண்டது.

பீல்ட் மார்ஷல் அயூப்கான் சர்வாதிகாரியானார். நீண்டகாலம் அவர் ஆட்சியிலிருந்தார்.

இது மக்களுக்கும், இராணுவத்துக்குமே சலிப்பேற்படுத்தியது.

அயூப்கானை அகற்றிவிட்டு யாஹ்யாகான் சர்வாதிகாரியானார்.

இவரது ஆட்சியைவிட அயூப்கானின் ஆட்சிநல்லது என்று சொல்லுமளவுக்கு யாஹ்யாகான் நடந்துகொண்டதும் கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்து சுதந்திர 'பங்ளாதேஷ்' உருவானதும் தெரிந்ததே.

பிரதமர் பூட்டோ நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். மக்களுக்கு வாக்களித்தபடி புதிய அரசியல் அமைப்பை உருவாக்கித் தேர்தல் நடத்தி ஜனாதிபதியாக இருந்த பூட்டோ பிரதமரானார்.

இந்தியாவுடனும் நட்புக் கொண்டாடினார். வெளிவிவகாரக் கொள்கையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார்.

இந்தத் தேர்தலில் ஜனாப் பூட்டோவின் மக்கள் கட்சிக்கு எதிராக பத்தொன்பது எதிர்க்கட்சிகள் கூட்டு முன்னணி அமைத்துப் போட்டியிட்டன.

மக்களின் கஷ்டங்கள் அனைத்தையும் தீர்த்து பாகிஸ்தானை சொர்க்கலோகமாக்குவதாக எதிர்க்கட்சிக் கூட்டணி தேர்தலில் பிரசாரம் செய்தது.

சிந்து மாகாணத்திலும் பலுசிஸ்தான் மாகாணத்திலும்பூட்டோவுக்குசெல்வாக்கில்லை என்று எதிர்க்கட்சிக் கூட்டணி உறுதியாக நம்பியது.

ஆனால் எதிர்க்கட்சிகூட்டணியின் வாக்குறுதிகளை விட நடைமுறைக்கேற்ற வாக்குறுதிகளை ஜனாப் பூட்டோ தேர்தல் பிரசாரத்தில் அளித்து மக்களைத் தன்பக்கம் திருப்பினார்.

எதிர்காலக் கொள்கைத் திட்டங்களை மட்டும் ஜனாப் பூட்டோ வெளியிடவில்லை. கடந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்திலும் தாம் ஏற்படுத்திய சாதனைகளையும் எடுத்துக் கூறினார்.

லஞ்சம், ஊழல்களை ஒழித்துக்கட்டுவதற்கும், விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கும் பூட்டோ உறுதியளித்தார்.

இவை. ஜனாப் பூட்டோவுக்கு பெருவெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கிறது.

வேறுபட்ட கொள்கைகளையுடைய கூட்டணியினால் நிலையான ஆட்சி அமையாது என்று பாகிஸ்தான் மக்கள் கருதினர்.

இருநூறு உறுப்பினர்கள் கொண்ட பாகிஸ்தான் ஆட்சிமன்றத்தில் 139 ஆசனங்களை ஜனாப் பூட்டோவின் மக்கள் கட்சி கைப்பற்றியுள்ளது.

மீண்டும் ஜனாப் பூட்டோவின் மக்கள்கட்சி அரசாங்கமே ஆட்சிபீடத்திலிருக்கும்.

பாகிஸ்தான் தேர்தல் முடிவு அடுத்தவாரம் இந்தியாவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலிலும் விரைவில் இலங்கையில் நடைபெறவிருக்கும் தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

## "திருமுறைகளின் முக்கியத்துவம்"

அனுராதபுரம், செவ்.

"எமது சைவப் பிள்ளைகள் தமிழ்மறையான திருமுறைகளைப் பண்முறையுடன் ஓதப் பழகிக்கொள்ளுதல் வேண்டும். தெருப்பாடல்களை விடுத்துத் திருப்பாடல்களையே சைவப் பிள்ளைகள் நாளும் இன்னிசையுடன் பாடுதல்வேண்டும். பண்ணொன்ற இசைபாடும் அடியார்களுக்கு, இறைவன் மண்ணுலக நல்வாழ்வையும், விண்ணுலக நல்வாழ்வையும் கொடுப்பான்."

இவ்வாறு அனுராதபும் விவேகானந்த மகாவித்தியாலயத்தில், விவேகானந்தசபையின் ஆதரவில் பண்ணிசை வகுப்பைத் தொடக்கிவைத்து உரையாற்றிய அதிபரும், சபைத் தலைவருமான திரு. வி. சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

இங்கு பண்ணிசை வேந்தன் திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தன் வாரம் இரு தினங்கள் இப்பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடாத்திவருகின்றார்.

(உ.)

# தேசீய அரசுப்பேரவையும் அரசியலமைப்புச் சட்டமும்

செ. சிறீக்கந்தராசா

இன்று எம்மை ஆண்டு கொண்டிருக்கும் அரசாங்கம் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் திகதி பதவிக்கு வந்தது. 1970-ம் ஆண்டின் தேர்தல் பழைய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் 379ஆம் அத்தியாயமான இலங்கை (அரசியலமைப்பு அரசபேரவைக் கட்டளையின் கீழ்) நடைபெற்றது. 1970இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றவர்களுடைய பெயர்ப் பட்டியலும் அவர்களுக்குரிய தொகுதிகள் பற்றிய விபரங்களும் 1946-ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசபேரவைக் கட்டளையின் 50-ம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தேர்தல்கள் ஆணையாளரால் 1970 ஜூன் 1-ம் தேதிய அதிவிசேட கசெற்றில் (இலக்கம் 14908/4) வெளியிடப்பட்டன.

1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி என்று தேதியிட்ட 14,898/7-ம் இலக்கக் கசெற்றில் மகா தேசாதிபதி ஒரு பிரகடனத்தை வெளியிட்டிருந்தார். அதன்படி 1970 ஜூன் 7-ம் திகதியன்று புதிய பாராளுமன்றம் சந்திப்பு நடத்துதல் வேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருந்தது.

1970 மே 29-ம் திகதிய 1490/4-ம் இலக்க கசற்றில் வெளியிடப்பட்ட ஓர் அறிவித்தல் மூலம், திருமதி ஸ்ரீமாவோ ஆர். டயஸ் பண்டாரநாயகா, மகாதேசாதிபதியினால் பிரதமமந்திரியாகவும், பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். பழைய அரசியலமைப்புச் சட்டத்தின் 46-ம் பிரிவின் கீழான தத்துவத்தைக்கொண்டு மகா தேசாதிபதி அத்தகைய நியமனத்தைச் செய்தார்.

1970 மே மாதம் 31-ம் திகதியன்று இன்னும் ஓர் அறிவித்தலை இலங்கை(அரசியலமைப்பு) அரசபேரவைக் கட்டளையின் 46-ம் பிரிவின் கீழ் மகாதேசாதிபதி வெளியிட்டார். இவ்வறிவித்தல் 14908/1-ம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியாகியது. இந்த அறிவித்தலின் படி, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் தலைமையின் கீழ் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவ்வாறு நியமனங்கள் செய்யப்பட்டதன் பின்னர், தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் 1970 ஜூன் மாதம் 7-ம் திகதி கூடிற்று. அப் பாராளுமன்றத்தின் முதல் கூட்டம் அதுதான். 1946இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசுப்பேரவைக் கட்டளையின் 11-ம் பிரிவின்படி அப் பாராளுமன்றம் அதன் முதல் சந்திப்பிலிருந்து 5 வருடங்களுக்குத் தொடர்ந்து பதவியிலிருக்கக்கூடியதாகவிருந்தது. அதாவது 1975 ஜூன் 7-ம் திகதிவரை பதவியிலிருக்கக்கூடியதாகவிருந்தது.

1970-ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதனது தேர்தல்விஞ்ஞாபனத்தில் புதிய அரசியலமைப்பை இயற்றி இலங்கைக்கு முழு விடுதலை கொடுக்கப்போவதாகவும் குறிப்பிட்டிருந்தது.

இதற்கிணங்க 1970-ம் ஆண்டின் தேர்தலில் வெற்றி பெற்றுப் பதவிக்கு வந்தவுடனும், புதிய அரசியலமைப்பை ஆக்கும்பணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் சகபாடிக் கட்சிகளான கொம்யூனிசக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி என்பனவும் இறங்கின. திட்டமிட்டபடி, 1972-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி புதிய அரசியலமைப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்தது.

புதிய அரசியலமைப்பின் 40-ம் பிரிவின் (1)ம் உட்பிரிவு தேசியஅரசுப்பேரவையின் வாழ்காலம் எவ்வளவு என்பதனைப் பின்வருமாறுகூறுகின்றது.

**"இவ்வரசியலமைப்பின் கீழ்த் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு தேசியவரசுப் பேரவையும், அது முன்னரே கலைக்கப்பட்டால் ஒழிய அதன் முதலாவது கூட்டம் நடைபெறும் தேதியிலிருந்து ஆறுண்டுகள் கொண்ட காலத்துக்குத் தொடர்ந்து இருத்தல் வேண்டும்; அதற்கு மேற்படல் ஆகாது. அந்த ஆறு ஆண்டுகள் கழிதலே தேசியஅரசுப் பேரவையைக் கலைப்பதாகச் செயற்படுதல் வேண்டும்"**

இந்தப் பிரிவு பொதுப்படையான பிரிவு. அரசியலமைப்பின் கீழ்த் தெரிவுசெய்யப்படும் ஒரு தேசிய அரசுப் பேரவைக்கு ஏற்புடையதாகக் கூடியபிரிவு.

முதலாவது தேசியஅரசுப் பேரவையின் காலத்தை வரையறுத்துக் கூறுகின்ற வேறொரு பிரிவும் அரசியல் அமைப்புச் சட்டத்திலே உள்ளது. 42-ம் பிரிவின் (5)-ம் உட்பிரிவே அது; அது பின் வருமாறு:

**"1-வது தேசியஅரசுப் பேரவையானது முன்னரே கலைக்கப்பட்டால் ஒழிய, அரசியல்நிருணயசபை இந்த அரசியலமைப்பினை ஆக்கிக்கொள்ளும் திகதியில் தொடங்குகின்ற ஐந்தாண்டுகாலத்துக்குத் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்"**

இந்த 42(5)ம் பிரிவுக்கும் நாம் முன்னே கண்ட 40(1)ம் பிரிவுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைவேற்றுமைகள் கவனிக்கப்படவேண்டியன. அவ்விரு பிரிவுகளையும் அருகருகே வைத்துப் பார்த்தால் வேறுபாடு புரியுமாதலால், அவற்றை மீண்டும் இங்கே தருகிறோம்.

40(1) "இவ்வரசியலமைப்பின் கீழ்த் தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு தேசியஅரசுப் பேரவையும் அது முன்னதாகவே கலைக்கப்பட்டாலொழிய அதன் முதலாவது கூட்டம் நடைபெறும் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகள் கொண்ட காலத்திற்குத் தொடர்ந்திருத்தல் வேண்டும்; அவற்கு மேற்படலாகாது. அந்த ஆறு ஆண்டுகள் கழிதலே தேசியஅரசுப்பேரவையைக்கலைப்பதாகச் செயற்படுதல்வேண்டும்"

42(5) முதலாவது தேசிய அரசுப்பேரவையானது முன்னரே கலைக்கப்பட்டாலொழிய அரசியல்நிர்ணயசபை இந்த அரசியலமைப்பினை ஆக்கிக் கொள்ளும் தேதியில் தொடங்குகின்ற ஐந்து ஆண்டு காலத்துக்குத் தொடர்ந்திருந்துவருதல்வேண்டும்"

40(1)ம் பிரிவிலே காணப்

(5-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்:

# பஸ்ஸில் நிகழ்ந்த ஓர் அனுபவம்

கடந்த 6-ந் திகதி ஞாயிறு மாலை நீண்டநேரம் சித்தன் கேணிச்சந்தியில் பஸ்ஸுக்குக் காத்திருந்தபோது வெகுநேரம் கழித்து 782 பாதை இலக்க, காரைநகர்—யாழ்ப்பாணம் பஸ்வந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் இரவு 8–40 க்கு கொழும்பு புகையிரதத்தில் செல்லும் பயணிகளே அநேகம் காணப்பட்டனர். 23ஸ்ரீ2243 இலக்கம் கொண்ட இவ்வண்டி இரவு 7 மணிக்கு சித்தன்கேணியிலிருந்து புறப்பட்டு மானிப்பாய்ச் சந்தியை வந்தடைந்தபோது சாரதிக்கும் நடத்துநருக்கும் இடையே ஏதோ தகராறு ஏற்பட்டது போலும். நடத்துநரை சினத்தால் ஏசிய சாரதி 'என்னால் ஓடமுடியாது. வேணுமானால் நீங்கள் போய்முறையிடுங்கள்' என்று பயணிகளிடம் கூறிவிட்டு பஸ்ஸைவிட்டு இறங்கிச் சென்றுவிட்டார். நேரமோ 7–30ஐத் தாண்டிவிட்டது. 'புகைவண்டிக்கு நேரமாகிவிட்டது தயவு செய்து எங்களைக் கொண்டு போய்ச் சேருங்கள்' என்று பயணிகள் கெஞ்சியதையடுத்து அருகில் இருந்த கடையில் சிகரெட் புகைத்துக்கொண்டு நின்ற சாரதி ஒருவாறு வண்டிக்கு வந்தார். எத்தனையோ பெண்பயணிகள் இருந்ததையும்பொருட்படுத்தாது, தகாத வார்த்தைகளால் ஏசிவிட்டுத்தான் அவர் வண்டியைச் செலுத்தினார். இக்கட்டத்தில் எங்கே தாம்ஏதும் கதைத்தால் சாரதி மீண்டும் 'பஸ்'ஸை நிறுத்திவிட்டு இறங்கிச்சென்று விடுவாரோ எனப்பயந்து ஒரு பயணியாவது வாய் திறக்கவில்லை.

சிறந்த சேவைசெய்யும் சாரதிக்கு இந்தியா சென்றுவரச் சலுகை செய்யப்போவதாக அறிவித்திருக்கும் அமைச்சு இப்படியான சேவை செய்வோருக்குஎன்னசெய்யப்போகிறது.

இதுசம்பந்தமாக அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கன்றி பொதுமக்களின் கஷ்டத்தைச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்துகொண்டு, தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ளவேண்டுமென்பதற்காகவே இதனை எழுதுகிறேன்.

கே. கிருஷ்ணானந்தன்
யாழ்ப்பாணம்.

# தமிழர் கூட்டணியும் சுயாட்சிக் கழகமும்

தமிழர் கூட்டணியின் தோற்றம் எப்போது? தமிழர் சுயாட்சிக் கழகம் கூட்டணியுடன் ஆரம்பத்தில் இணைந்திருந்ததா? இவ்விஷயங்கள் பற்றி திரு. வ. நவரத்தினம், திரு. ஞானமூர்த்தி ஆகிய இருவரும் ''ஈழநாடு'' பத்திரிகை மூலம் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டனர்.

பல்வேறு காரணங்களால் பிரிந்துநின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து 'தமிழர் கூட்டணி' ஆகப் பரிணமித்தன என்றால், அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை உருவாக்கித் தந்த பெருமை புதிய அரசியலமைப்புக்கே உரியது.

1970 பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட எம். பி.க்கள் 19-7-70ல் ஒன்று கூடி ''புதிய அரசியல் திட்டம் ஒன்றை வகுப்பதற்குத் தற்போதைய எம். பி.க்களே அரசியல் நிர்ணய சபையாக இயங்குவர் எனத் தீர்மானித்தனர். இவ்வாறு அ. நி. சபை அங்குரார்ப்பணம் செய்யப்படுவதற்கு முன்னதாகவே தமிழ்க்கட்சிகள் புதிய அரசியல் அமைப்பைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கின. தமிழரசுக்கட்சியின் சார்பில் திரு. அ.அமிர்தலிங்கம், 'ஆட்சிமன்றத்துக்கு வெளியே அ. நி. சபையைக் கூட்டுவது சட்ட விரோதமானது. ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட எவரும் அரசின் இந்நடவடிக்கையைக் கண்டிக்காமல் இருக்க முடியாது'' என 18-7-70ல் 'சுதந்திரன்' மூலம் ஓர் அறிக்கையை வெளியிட்டார். இதற்கு முன் 10-6-70ல் தமிழர் சுயாட்சிக் கழகத்தலைவர் திரு. வ. நவரத்தினம் ''.........தற்போதைய அரசியலமைப்பை அகற்றி இந்நாட்டைக் குடியரசாகப் பிரகடனப்படுத்திய பின் தமிழரின் நிலை என்ன? காலதாமதமின்றி அடுத்த நடவடிக்கை பற்றிச் சிந்தித்துச் செயல்படவேண்டும்'' என அறிக்கை வெளியிட்டார்.

17-7-70ல் திரு. செல்வநாயகம் கொழும்பில் சர்வகட்சிகளுக்கும் அழைப்பு அனுப்பி புதிய அரசியலமைப்புப்பற்றி ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினர். ஆனால் அக்கூட்டத்துக்கு தமிழர் சுயாட்சிக் கழகத்துக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. அ. நி. சபை விஷயத்தில் அமிர், நவம் போன்றோருக்கிடையே கருத்து ஒற்றுமை காணப்பட்டபோதிலும் சுயாட்சிக் கழகத்துக்கு அந்தக்கூட்டத்துக்கு அழைப்பு அனுப்பாததுபற்றி 1-8-70 'விடுதலை' இதழில் சுயாட்சிக் கழகத்தினர் குறைப்பட்டுக் கொண்டனர்.

இந்த நிலையிலே 19-7-70ல் நடந்த அ. நி. சபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தமிழரசு எம். பிக்கள் கலந்துகொண்டதுடன் 'ஜூலை 19-ம் நாளையே இனி சுதந்திரதினமாகக் கொண்டாடவேண்டு'மென தமிழரசு எம். பி. ஒருவர் அக்கூட்டத்தில் குறிப்பிட்டார். தமிழ்க்காங்கிரஸ் எம். பிக்களும் அவ்வைபவத்தில் பங்குபற்றினர். '......தமிழ்மக்கள் அ.நி.சபையில் முழுமனதுடன் கலந்து பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையைப் பெற முயலவேண்டு'மென 18-7-70 'ஒப்சேவர்' இதழில் திரு. ஜி. ஜி. அறிக்கையும் விட்டிருந்தார்.

இவ்வாறு தமிழரசு-காங்கிரஸ் எம். பி.க்கள் முழுமனதுடன் அ. நி. சபையில் கலந்துகொண்டபோது, 'தமிழ் எம். பி.க்கள் அ. நி. சபையைப் பகிஷ்கரித்துவிட்டு ஈழத்தில் 'தனிஅரசு' ஒன்றை உருவாக்க உழைக்கவேண்டும். இனியும் இதுவிஷயத்தில் காலம் தாழ்த்தக்கூடாது' எனத் தமிழர் சுயாட்சிக் கழகம் அறிக்கை விட்டதுடன், பொதுத் தேர்தலில் தமிழ்மக்களின் அதிகாரத்தைப் பெறுதவகையிலே அ.நி. சபையிலே கலந்துகொண்டதற்கு 25-7-70ல் கூடிய கழகச் செயற்குழு கண்டனமும் தெரிவித்தது.

இவ்வாறு ஆரம்பத்திலேயே அ. நி. சபையில் கலந்துகொள்ளும் விஷயத்தில் தமிழரசு—காங்கிரஸ் (தற்போது கூட்டணி) கட்சிகளிடையேகருத்து ஒற்றுமையும், சுயாட்சிக் கழகத்துக்கு கருத்துவேற்றுமையும் ஏற்பட்டுவிட்டது.

இந்தநிலையிலே திரு. ஞானமூர்த்தி, திரு. நாகராசா போன்ற பெரியார்களது முயற்சியினால் 7-2-71ல் வல்வெட்டித்துறையில் கூடிய தமிழரசு, காங்கிரஸ், ஈ. த. ஒ. மு. சுயாட்சிக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அ. நி.சபைக்கு தமிழினத்தின் குறைந்த பட்சக் கோரிக்கை ஒன்றினைச் சமர்ப்பிப்பதில் இணக்கம்கண்டன. அ. நி.சபையைப் பகிஷ்கரித்துவிட்டு 'தனிநாடு' ஒன்றைநிறுவஉழைக்கவேண்டுமெனக் கருத்துவெளியிட்ட சுயாட்சிக் கழகமும் இதில்கலந்துகொண்டு 'ஒன்பது அம்சத் திட்டத்'தில் கையொப்பமிட்டது உண்மையே. ஆயினும் இக்குறைந்த பட்சக் கோரிக்கைகளை அ. நி. சபையிலே சமர்ப்பிக்குமுன் அரசுடனும், வழிகாட்டு விஷயக்குழுவுடனும்தனிப்படப்பேசிப்பார்த்து இவற்றை ஏற்றுக்கொள்ளும் சாத்தியம் இல்லைஎனத் தெரியவரின் அ. நி. சபையைப் பகிஷ்கரிக்கவேண்டும் என சுயாட்சிக் கழகமும், ஈ. த. ஒ. மு.யும் கருத்து வெளியிட்டன. இக்கருத்தை நான்குகட்சி எம்.பிக்களும் ஏற்றுக்கொண்டதாக 17-2-71சுதந்திரனும், 15-2-71 விடுதலையும் செய்திகளை வெளியிட்டிருந்தன.

1-3-71ல் திரு. வ. நவரத்தினம் 'பாகிஸ்தானைப்பார்' என ஒரு கட்டுரையை வெளியிட்டார். அதில் பூட்டோ பகிஷ்காரம் மூலம் போடும் சிக்கலான அரசியல்முடிச்சைச் சுட்டிக்காட்டி தமிழ் எம், பி.க்கள் அதைப்பின்பற்றவேண்டுமென வலியுறுத்தினர். 'வழிகாட்டு விஷயக்குழுவால் ஒன்பது அம்சத்திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் வல்வை மாநாட்டு முடிவை மீறித் தமிழ் எம். பி.க்கள் தொடர்ந்தும் அ. நி.சபையில் பங்குபற்றுகிறார்கள் 1-4-71ல் சுயாட்சிக் கழகம் குற்றம்சாட்டியது. செல்வா தலைமையில் தூதுக்குழு பிரதமரைப்பேட்டி கண்டபோது ஒன்பது அம்சத்தை அவர்ஏற்கமறுத்துவிட்டதாக 'ஈழநாடு' செய்திவெளியிட்டது. ஆனால் பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்ததாகவும் தமது நல்லெண்ணததைப் பிரதிபலிக்கவே ஸ்ரீலங்கா குடியரசு தீர்மானத்தை அ. நி. சபையில் ஆதரித்ததாகவும் திரு. வ. ந. நவரத்தினம்(சாவகச்சேரி) சமாதானம் கூறினர்.

இதேநேரத்தில் தமிழரசுக் கட்சி தனியாக பதினொரு அம்சக் கோரிக்கை ஒன்றினை அ.நி. சபைக்குச் சமர்ப்பித்தது. இதுவும் வல்வை ஒற்றுமையை உடைக்கும்செயல் என சுயாட்சிக் கழகம் குற்றம்சாட்டியது. 27-3-71ல் தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கையான சமஷ்டித் திருத்தத்தை ஒருவருமே (தமிழரசார் உட்பட) ஆதரிக்காதநிலையிலேஸ்ரீலங்கா ஒற்றையாட்சிக் குடியரசு தீர்மானம் நிறைவேறியது. கடைசியில் வடக்கு கிழக்கில் நீதிமன்ற அந்தஸ்தையாவது தமிழுக்குத் தரும்படியும் தந்தால் அ, நி. சபையில் தொடர்ந்து பங்குபற்றுவதாகவும் தமிழரசுக்கட்சி வல்வை ஒன்பது அம்சத்தையும் விட்டுக் கீழிறங்கிக் கேட்டு (21-11-70 சுதந்திரன்) கிடைக்காதநிலையிலே 28-6-71 இனி அ. நி. சபையிலே கலந்துகொள்ள மாட்டோமென செல்வா அறிவித்தார்.

இவ்வாறு வல்வையில் ஏற்பட்ட ஒற்றுமை இடையிலே கருத்து வேற்றுமை கண்டு உடைந்து மீண்டும் ஒற்றுமை காணக்கூடிய நிலை அ. நி.சபை பகிஷ்கரிப்புடன்ஆரம்பித்தது. ''தமிழினம் ஒரு தேசிய மாநாட்டில் புதிய அரசியலமைப்பை நிராகரிப்பதாகஊரறிய, உலகறியப் பிரகடனம் செய்ய வேண்டும்'' என 15-9-71 ல் தமிழர் சுயாட்சிக்கழகமும் கருத்து வெளியிட்டது. இது மீண்டும் ஒற்றுமை ஏற்படுவதற்கு உகந்த ஒரு சகுனமாகக் கருதப்பட்டது. இதைத் தொடர்ந்து ''வல்வை அன்பர்கள் மீண்டும் தமிழ்த்தலைவர்களை ஒன்று கூட்ட முயற்சி எடுக்க வேண்டும்'' என 4-10-71ல் நடந்த அஞ்சல் எழுதுவினைஞர் சங்க மாநாட்டிலும் ''தமிழ்க்கட்சிகளை மீண்டும் ஒருமுகப்படுத்தி இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என் 24-10-71-ல் கூடிய அரசாங்க எழுது வினைஞர் சங்கமும் தீர்மானங்களை நிறைவேற்றின.

1972 ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் சிறப்பு மாநாடு கூட்டிய தமிழரசுக் கட்சி: தாம் புதிய அரசியல் அமைப்பை நிராகரிப்பதாகவும் நான்கு அம்சக்கோரிக்கை ஒன்றினை வகுத்து அதுதான் தமிழினத்தின் திட்டவட்டமான இறுதிக் கோரிக்கை எனவும் முடிவு செய்தது. இம்மாநாடு பற்றி 15-2-72ல் கருத்துவெளியிட்ட திரு. வ. நவரத்தினம், புதிய அரசியலமைப்பை நிராகரிப்பது என்ற இம்முடிவு சகல தமிழ்க்கட்சிகளையும் கொண்ட ஈழத் தமிழ் இனத்தின் ஒரு தேசிய மாநாட்டுல் எடுக்கப்பட்டிருந்தால் அதுமிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமெனவும் அப்படி ஒரு தேசிய மாநாடு கூட்டப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

இதற்கு மூன்று மாதங்களின் பின் 14-5-72ல் திருமலை நகர சபை மண்டபத்திலே திரு. செல்வநாயகம் ஒரு தேசிய மாநாட்டைக் கூட்டினர். ''புதிய அரசியலமைப்பை தமிழினம் நிராகரிக்கிறது'' என்ற தீர்மானம் திரு. எம். எஸ். செல்லச்சாமியால் முன்மொழியப்பட்டு திரு. மு. சிவசிதம்பரத்தால் வழிமொழியப்பட்டது. ஆனால் இம்மாநாட்டுக்கு அப்படியான ஒரு தேசிய மாநாடு கூட்டப்படவேண்டுமெனக் கருத்து வெளியிட்ட தமிழர் சுயாட்சிக் கழகத்துக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. திரு. நவரத்தினத்துக்கு தனிப்பட்ட அழைப்பு ஒன்று அனுப்பப்பட்டது. இந்த மாநாட்டிலேதான் 'தமிழர் கூட்டணி' என்றபதம் இயக்க ரீதியாகப் பயன்படுத்தப்பட்டதுடன் நடவடிக்கைக் குழு அலுவலர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

1-6-72ல் சுயாட்சிக் கழகப் பொதுச்செயலாளர் வெளியிட்ட ஒரு அறிக்கையில் நடவடிக்கைக்குழுவில்கழகத்துக்கும் இடமளிக்க வேண்டுமெனச் சிலர் கூறியதாகவும் அதற்கு கழகத்துக்கு அழைப்பு விடுக்கப்படுமென பதிலளிக்கப்பட்டதாகவும் இதுவரை எந்தவிதமான அழைப்பும் கிடைக்கவில்லை எனவும் உண்மையான ஒற்றுமையை விரும்புபவர்களுக்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார்.

15-8-72வரை எதுவிதமான அழைப்பும் கிடைக்காத நிலையில் அவர் மீண்டும் ஒரு அறிக்கை விட்டார். அதில்; ''கூட்டணியில் கழகம் இணைவதை தமிழரசு உயர்பீடம் விரும்பவில்லைப்போலும். மக்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் கழகத்துக்கு முறையான அழைப்பு விடப்படுமானல் கழகம் அதனை ஆராய்ந்து கருத்து ஒற்றுமை கண்டால் கூட்டணியில் இணைந்து இயங்கும்'' எனக் குறிப்பிட்டார், அதற்கும் கூட்டணி சார்பில் எதுவித பதிலும் அனுப்படபடவில்லை. ஆயினும் திருமலையில் 'புதிய தேசியசபை பற்றி ஆராய்வதற்கென ஒரு கருத்தரங்கு கூட்டணி அமைப்பாளரால் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் கலந்து கொள்ளுமாறு தமிழர் சுயாட்சிக்கழகத்துக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அதன்படி கழகத்தின் சார்பில் திரு. செ. கோடீஸ்வரன் கலந்து கொண்டு புதிய தேசிய சபையையும் தமிழ் எம். பிக்கள்பகிஷ்கரித்து தனித் தமிழ் ஈழம் ஒன்றை உருவாக்குதற்கு உழைக்க வேண்டும் ஒன்றை எனவும், அப்படி பகிஷ்கரிப்பதன்ன் மூலம் ஏற்படும் இடைத்தேர்தலைச் சர்வசன வாக்கெடுப்பாக உலகுக்குக் காட்டலாமெனவும் குறிப்பிட்டார். இக்கருத்தரங்கில் உடுவில் எம்.பி யும் கலந்துகொண்டார். இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு சுயாட்சிக் கழகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டதே தவிர கூட்டணியில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இதன் பின்பு 26- 5- 72ல் கோப்பாயில் கூடிய கூட்டணி நடவடிக்கைக்குழு மீண்டும் அரசியலமைப்புக்கு ஆறு அம்சத் திருத்தமொன்றினைச் சமர்ப்பித்து அரசுக்கு மூன்றுமாத கால அவகாசமும் கொடுத்து 4- 7- 72ல் தேசிய சபையில் கலந்துகொண்டது. ஆனால் சுயாட்சிக் கழகமோ தேசிய சபையைப் பகிஷ்கரித்து 'தனிநாடு' காண்பதற்கான வழிவகைகளில் ஈடுபடவேண்டுமெனப் பிரசாரம் செய்தது. இதனால் பிளவு மீண்டும் விரிந்தது. இதன்பின் பலகாலம் உறவுஏற்படுவதற்குரிய சகுனம் தென்படவே இல்லை.

— திருவாதவூரன் —

## சுவீப் முடிவுகள்

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 605 வது சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு:
**57 H 0161**
**ரூ. 1,00,000**

இரண்டாவது பரிசு:
**31 X 0744**
**ரூ 40,000**

மூன்றாவது பரிசு:
**43 X 0746**
**ரூ. 10,000**

தலா 1,464 ரூபாய் வீதம் பரிசுபெறும் டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 50 A 0581 | 31 B 0763 |
| 32 B 0092 | 38 B 0839 |
| 43 B 0832 | 46 B 0254 |
| 48 B 0265 | 35 C 0933 |
| 40 C 0155 | 34 D 0888 |
| 56 D 0957 | 30 E 0364 |
| 41 E 0495 | 55 E 0755 |
| 07 F 0909 | 14 F 0677 |
| 04 G 0575 | 17 G 0247 |
| 29 G 0666 | 45 G 0777 |
| 48 G 0821 | 60 G 0693 |
| 06 H 0416 | 29 H 0356 |
| 48 H 0128 | 05 J 0828 |
| 15 J 0292 | 16 J 0475 |
| 52 J 0969 | 03 K 0437 |
| 11 K 0107 | 31 K 0356 |
| 38 K 0692 | 43 K 0348 |
| 57 K 0278 | 20 L 0379 |
| 27 L 0812 | 38 L 0383 |
| 49 L 0041 | 02 M 0979 |
| 10 M 0943 | 30 M 0312 |
| 33 M 0631 | 36 M 0700 |
| 38 M 0190 | 56 M 0180 |
| 29 N 0180 | 38 N 0114 |
| 26 O 0086 | 44 O 0583 |
| 31 P 0847 | 56 P 0020 |
| 58 P 0053 | 44 Q 0624 |
| 05 R 0629 | 11 R 0574 |
| 19 R 0205 | 21 R 0569 |
| 21 R 0882 | 23 R 0991 |
| 45 R 0982 | 02 S 0991 |
| 29 S 0119 | 44 S 0950 |
| 45 S 0107 | 55 S 0883 |
| 01 T 0503 | 02 T 0184 |
| 30 T 0072 | 56 T 0709 |
| 60 T 0774 | 03 U 0270 |
| 11 U 0817 | 38 U 0382 |
| 58 U 0937 | 16 V 0265 |
| 27 V 0015 | 47 V 0135 |
| 03 W 0381 | 10 W 0260 |
| 17 W 0764 | 24 W 0877 |
| 25 W 0327 | 31 W 0737 |
| 41 W 0147 | 43 W 0092 |
| 48 W 0033 | 51 W 0527 |
| 26 X 0919 | 01 Y 0178 |
| 17 Y 0275 | 26 Y 0907 |
| 40 Y 0749 | 48 Y 0762 |
| 52 Y 0431 | 18 Z 0507 |
| 22 Z 0941 | 30 Z 0683 |
| 43 Z 0691 | 53 Z 0238 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

## காட்டுப்பகுதியில் பஸ்ஸை நிறுத்துகிறார்களாம்

வவுணதீவு,செவ்.

மட்டக்களப்பு - கொழும்பு சேவையில் ஈடுபத்தப்படும் பஸ் காட்டுப்பகுதிகளில் நிறுத்தப்படுவதாகப் பிரயாணிகள் இ. போ. ச. அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர். எரிபொருள் இன்மையால் அவ்வாறு நிறுத்த வேண்டியிருப்பதாக சாரதிகள் காரணம் கூறுகின்றனராம். இதனால் வழிப்பறிக் கொள்ளையர் பற்றி பீதியடைவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறிருக்க கொழும்பு மட்டக்களப்பு தபால் வண்டி உட்பட யாழ்-மட்டுநகர் சேவை வழமையான நேரங்களைவிட தாமதமாகியே இங்கு வந்தடைகின்றதாம். ஏற்கனவே மார்கோவுக்கும் மட்டக்களப்புக்குமிடையே நடைபெற்றுவந்த ''ரயில்கார்'' சேவை சிலமாதங்களுக்குமுன்னர் நிற்பாட்டப்பட்டிருப்பதால் ரயில் பிரயாணிகள் சிரமப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர். (அ)

## தேசிய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

படும், ''அதற்கு மேற்படலாகாது; அந்த ஆறு ஆண்டு கழிவதே தேசியஅரசுப்பேரவையைக் கலைப்பதாகச் செயற்படுதல் வேண்டும்'' என்ற சொற்கள் 42(5)ம் பிரிவிலே காணப்படவில்லை. காணப்படாமைக்குக் காரணம் என்ன? காரணம் உண்டா? தற்செயலாக விடப்பட்டதா? வேண்டுமென்றே விடப்பட்டதென்றால் நோக்கம் எதுவும் உண்டா? மர்மம் ஏதும் அடங்கியுள்ளதா? என்று அரசியலமைப்புச்சட்ட நிபுணர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

42(5)ம் பிரிவின்படி தற்போதைய தேசியஅரசுப்பேரவையின் பதவிக்காலம் 1977ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதியோடு முடிவடையும். அரசியலமைப்புச் சட்டப்படி தேசியஅரசுப்பேரவையைக் கலைக்கும் தத்துவம் ஜனாதிபதிக்கு உண்டு. தேவையேற்படின் தேசியஅரசுப்பேரவையின் அமர்வினை (session) நிறுத்திவைக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு. இந்தத் தத்துவத்தைப் பின்பற்றியே சென்றமாதம் 10-ம் திகதி (1977 பெப்ரவரி 10) பாராளுமன்றத்தில் அமர்வுகள் ஜனாதிபதியினால் இடைநிறுத்தப்பட்டன. பாராளுமன்றின் அமர்வுகளை இடைநிறுத்தல் என்றால்என்ன? அதன் சட்ட விளைவுகள் யாவை? என்பதை அடுத்துவரும் கட்டுரைகளில் பார்ப்போம்.

# "இளமை திரும்பிவராது என்பதை நினைவில்கொள்க"

## மாணவர்க்கு அமைச்சர் 'சூரியர்' அறிவுரை

சுழிபுரம், செவ்வாய்

'இளமை என்றும் திரும்பிவராது. ஆதலால் இளமைக் காலத்திலேயே அறிவைத் தேடிக்கொள்ளவேண்டும் நான் அமைச்சராக வரும் முன்னர் விரிவுரையாளராகவே கடமையாற்றி வந்தேன். எனது இளமைக் காலத்தில் கல்விகற்கும் போது நிறைந்த ஞாபக சக்தியை இறைவன் எனக்குத் தந்திருந்தார். ஆதலால்தான் நான் இளமைக் காலத்தில் நல்ல கல்வியைப் பெறமுடிந்தது'

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற சிறப்புவைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் குறிப்பிட்டார்.

விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவரான அமைச்சர் திரு. குமாரசூரியர் புதிய விடமைப்பு அமைச்சராகவும் பொறுப்பேற்று சுழிபுரத்திற்கு முதன்முறையாக வருகை தந்ததையொட்டியே இவ்வைபவம் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திரு. வை. இராசசுந்தரம் இவ்வைபவத்திற்கு தலைமைவகித்தார்.

அமைச்சர் திரு. குமாரசூரியர்மேலும் பேசுகையில், 'நான் இன்று இளைஞனாக இல்லையே என்று ஏங்குகின்றேன். இளையோர் யாவரும் இளமையை நல்ல விதத்தில் பயன்படுத்த வேண்டும். அன்றுஎமக்கு இராமாயணம் படிக்கக்கூடிய வாய்ப்புஇல்லாது இருந்தும், நாம் ஆங்கிலத்தில் படித்த மகாபாரதம் போன்ற அறிவைக் கொண்டே இன்று பயன்பெறுகின்றோம். மாணவர்கள் இளமை திரும்பிவராது என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

திரு. இராசசுந்தரம் அமைச்சரை வரவேற்றுப்பேசுகையில், 'எங்கள் இருவரையும் இந்த உயர்ந்த இடத்தில் வைத்த பெருமை இக்கல்லூரியையே சாரும். திரு. குமாரசூரியர் கல்விகற்கும்போது பெரிய குறும்புக்காரனாக வகுப்பில் இருந்ததை நான் அறிவேன். இவரது குறும்புகள் அனேகமாக பாடங்களிலேயே இருந்தன'

திருமதி எஸ். தங்கராஜா நன்றியுரை கூறினார். (உ)

### 'பாடசாலை வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு'

சாவகச்சேரி, செவ்.

'ஒரு பாடசாலை நன்கு வளர்ச்சியடையும்போது அப்பாடசாலையிருக்கும் கிராமமும் நாகரிகத்தில் வளர்ச்சியடையும். ஆகவே கிராம மக்கள் சிறந்த மனப்பாங்குடனும் ஆர்வத்துடனும் தமது பாடசாலைக்கு உதவிபுரிய முன்வரவேண்டும்' என்று கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய பெற்றோர் ஆசிரிய சங்க வருடாந்தக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. கே. பேரம்பலம் கூறினார்.

பெற்றோர்-ஆசிரியர் சங்க புது வருட உத்தியோகத்தர் விபரம் வருமாறு:- தலைவர்: அதிபர் திரு. கே. பேரம்பலம், உபதலைவர்: திரு. சி. தியாகராசா, செயலாளர்: திரு. பொ. இராசரத்தினம், உபசெயலாளர்: திரு. க. பாலசிங்கம், பொருளாளர் திரு. க. இராசதுரை.

ஆறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (உ)

### "கல்வியில் அரசியல் தலையீடு"

சங்கானை, செவ்வாய்

சங்கானை பட்டணசபை எல்லைக்குள் மூன்றுவது சிறுவர் பாடசாலை சபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலத்தால் 5-ம் வட்டாரத்தில் திறந்து வைக்கப்பட்டது. அவ்வைபவத்திற்குப் திரு. திருச்சிற்றம்பலம் தலைமைவகித்து பேசுகையில் "அரசாங்கத்தின் இத்திட்டத்தை பொதுமக்கள் பேணிக்காத்து அவற்றை வளர்ச்சிபெறச் செய்யவேண்டும். என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் சிறந்த ஒரு பிரஜை உருவாக்கப்பட்டால் அது நாட்டிற்கும், வீட்டிற்கும் நன்மையாக அமையும். பொதுவாக கல்வித்திட்டங்களில் கல்வி நிபுணத்துவம் உள்ளவர்கள் தலைமையும் அறிவுரைகளும் விரும்பத்தக்க தொன்றாகும். அவற்றில் அரசியல் தலையிடுவதால் கல்வி முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள்ஏற்படுவதில்லை. இதனை அண்மைக்காலச் சம்பவங்கள் அறிவுறுத்துகின்றன.

முன்னை நாள் ப. சபை தலைவர் திரு. எஸ். முத்தையா பேசுகையில் "இப் புதிய திட்டம் சிறுவர்களுக்கு நல்ல வாய்ப்பை அளித்துள்ளது இதனை பெற்றோர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி பலனை பெறவேண்டும்" என்று குறிப்பிட்டார் இவர் சிறுவர்களுக்கு இலவசமாக அரிச்சுவடிகளை அன்பளிப்பு செய்தார்.

மற்றும் ஆசிரியர் எஸ். சிவகுரு, திருமதி. க. புஸ்பராணி வட்டார உறுப்பினர் வி. செல்வராசா ஆகியோரும் உரையாற்றினர். (உ)

### புலமைப் பரிசில்

வண்ணார்பண்ணை, செவ்.

மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலையில் கல்வி பயின்ற மண்டைதீவு வீ. சோமசுந்தரம் தம்பதிகளின் புதல்வி செல்வி சோ. வசந்தரோகிணி அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைச் சித்தியெய்தியுள்ளார். (அ)

# "சங்கானைச் சங்கத்தை கூட்டுறவு அதிகாரசபை பொறுப்பேற்க வேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்

'சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நிர்வாகத்தை யாழ். மாவட்டக் கூட்டுறவு அதிகாரசபை உடனடியாகப் பொறுப்பேற்கக் கட்டளையிடுவதுடன் பிரச்னைகளை உடனடியாகத் தீர்த்துவைக்க நடவடிக்கையும் மேற்கொள்ளவும்' என்று கூட்டுறவுஅமைச்சரைக் கோரும் தீர்மானத்தை இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டக்குழுக் கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டது.

இச்சங்கநிர்வாகத்தை யாழ். மாவட்டக் கூட்டுறவு அதிகார சபை உடனடியாகப் பொறுப்பேற்கவேண்டுமென்றும், பல்வேறு விசாரணைக் குழுக்களின் சிபார்சுகளை உடனடியாக அமுல் நடத்தித் திறமையான நிர்வாகத்தை அமைத்துப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்குமாறும் கோரும் மற்றொரு தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது. நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானம் வருமாறு:-

### விசாரணைக்கமிஷன் வேண்டும்'

'யாழ்ப்பாணம்பெரியகடை, பஸ்நிலையம் முதலியவற்றில் இராணுவத்தினர் சாதாரண உடையில் பொதுமக்கள்மீது நடத்திய ஆத்திரமூட்டும் சம்பவங்களை இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ். மாவட்டக்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது. இப்படியான வேண்டத்தகாத சம்பவங்கள் தமிழ்மக்கள் மத்தியில் அரசாங்கம் எடுக்கும் நல்ல நடவடிக்கைகளுக்குத் தடைசெய்து அவநம்பிக்கை ஏற்படுத்த வழிவகுக்கும்.

ஆகவே அரசாங்கம் ஒருபாரபட்சமற்ற விசாரணைக் கமிஷனை நியமித்து குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடுவழங்கவேண்டும்'.

### மிளகாய்ச்செடி நோய்

சங்கானை, செவ்வாய்

வலி - மேற்குப்பிரிவில் மிளகாய் செடியில் கொப்பழுகல் நோய் பரவத் தொடங்கியுள்ளது.

இந்நோய்காணப்பட்ட மரத்தின் மேற்பாகம் பூ, பிஞ்சுகளுடன் முற்றாக வாடி விழுந்து விடுகின்றன. சிறு கன்றுகளிலும் இந்நோய் பீடித்ததும் அதுவும் முற்றாக பாதிபுற்று விடுகிறது.

இப்பகுதிவிவசாய விரிவாக்க நிலையத்தாருடன் தொடர்பு கொண்டும் அவர்களின் போதனைகளைபின்பற்றி தெளிக்கும் கிருமிநாசினிகளாலும் இந்நோய் கட்டுக்கடங்குவதாகத் தெரியவில்லை என இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நோய் மேலும் பரவி தமது பயிர்களை நாசம்செய்து விடுமா என விவசாயிகள் அஞ்சுகின்றனர். (உ)

# இ. போ. ச நடத்துநர்கள் மீது தீவிர கண்காணிப்பு

## மோசடியைத் தடுக்க நடவடிக்கை

கொழும்பு, செவ்

மோசடியில் ஈடுபடும் இ. போ. ச. நடத்துநர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் பணியில் இ.போ.ச. தலைமைப்பீடம் தீவிரமாக செயற்படவுள்ளதாக இன்று தெரிவிக்கப்பட்டது.

கடந்தவருடம்மட்டும் 6314 நடத்துநர்கள் தவறான நடத்தை காரணமாக விசாரணை செய்யப்பட்டதாகவும், மீரிகமவில் உள்ள நடமாடும் திடீர் பரிசோதனைக் குழுவினர் இதில் துரிதமாகச் செயற்படுவதாகவும்தெரிவிக்கப்பட்டது.

நிதிமோசடி, டிக்கட்மெஷினில் மோசடி போன்றவற்றில் இவர்கள்ஈடுபட்டதாகக்கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறப்பட்டது.

ஒழுங்கீனமாக நடக்கும் நடத்துநர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று இ. போ. ச. எச்சரிக்கைவிடுத்துள்ளது. (ஆ)

# 'தமிழ்ஈழத்தில்பொருளாதார உயர்வுக்குவசதிகள்உண்டு"

## பொன்னாலைக்கருத்தரங்கில் அமிர் விளக்கம்

சுழிபுரம், செவ்

இயற்கையானபலமூலவளங்களும், காங்கேசன் துறைத் துறைமுகமும் வடக்கு,கிழக்கு பிரதேசங்களில் இருக்கும் போது நாம் யாருடைய தயவும் இல்லாமல் எங்கள் பொருளாதார வளத்தை அமைத்துக் கொள்ளலாம்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

பொன்னாலைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நடைபெற்ற த. வி. கூட்டணியின் கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

வட்டுக்கோட்டைத்தொகுதி இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. ரி இராசலிங்கம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. 'அமிர்' மேலும் பேசுகையில் "நாடு பிரிந்தால் உங்கள் பொருளாதார வளம் என்ன என்று சிலர் கேட்பதில் அர்த்தமேயில்லை. தன்மானத்துடன் வாழ எமக்கு தனிநாடு ஒன்றே வழி. சிங்களப்பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகள் கொடுக்கும் லாபத்திலும் பார்க்க எமதுபகுதிகளிலுள்ள தொழிற்சாலைகள் பெரும் லாபத்தைக் கொடுக்கின்றன என்பதை புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

வடக்கு, கிழக்குப்பகுதிகளில் உள்ள விவசாயக் காணிகள், கைத்தொழிற்சாலைகள் கடல் வளங்கள் ஆகியவற்றினால் வரும் பயன் யாவும்எம்க்குமிதமிஞ்சியவையாகும்.

### காங்கேசன்துறைமுக மகத்துவம்

தென்கிழக்காசியாவில் காங்கேசன்துறை ஒரு இயற்கைத் துறைமுகமாகும். இத்துறைமுகம் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டால் கொழும்புத் துறைமுகத்திலும் பார்க்க வசதிகள் கூடியனவாக இது திகழும். வெளிநாட்டுக் கப்பல்களும் காங்கேசன்துறை துறைமுகத்தையேநாடிவருகை தரும். எமக்கு வேண்டிய அந்நிய செலாவணியை காங்கேசன்துறைத் துறைமுகமே கொண்டுவரும்.

எம்மிடம் உள்ள மூளைவளம் மனவளம், பொருள்வளம் ஆகியவற்றைக்கொண்டு எமக்குத் தேவையானவற்றை உருவாக்கி உயர்வு காண்போம்" என்றார்.

இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. க. சிவதாசன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர். (உ)

# "மக்களாட்சி மலரச்செய்ய யூ. என். பி. க்கே முடியும்"

யாழ்ப்பாணம், புதன்

'ஐக்கியதேசியக்கட்சி எதிர்வரும் பொதுத்தேர்தலிலே வெற்றிபெற்றுப் பதவிக்குவந்தால் தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகள் யாவற்றையும் தீர்த்துவைக்கும்' என்றுமானிப்பாய்த்தொகுதி ஐ. தே. கட்சி பிரதம அமைப்பாளர் திரு. எஸ். அலோசியஸ் சுதுமலை சிவன் ஆலய முன்றலில் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் பிரசாரக் கருத்தரங்கில் பேசும்போது கூறினார்.

இன்று நாட்டில் தாண்டவமாடும் பொருள் பற்றாக்குறை, பொருட்களின் விலையேற்றம் ஆகியவை ஐ. தே. கட்சி ஆட்சியில் முற்றாக நீக்கப்படும். இப்போது ஆட்சியில் அட்டை போல் ஒட்டியிருப்பவர்கள் பொய்வாக்குறுதிகளைக் கடந்த பொதுத்தேர்தலில் மக்களுக்கு அளித்து அவர்களை ஏமாற்றியே பதவிக்கு வந்தனர். இரண்டுகொத்து அரிசி இலவசமாகக் கொடுப்போமென்ற இவர்களின் உறுதிமொழியை நம்பிஇவ்வரசுக்கு மக்கள்வாக்களித்து, ஐ. தே. கட்சி அரசு கொடுத்த ஒருகொத்து அரிசியை அரைக்கொத்து அரிசியாகக் குறைத்ததே மக்கள் கண்ட பலனாகும். இன்றைய நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ. தே. க. ஆட்சிக்கு வருவதை எந்த ஒருசக்தியாலும் தடுக்கமுடியாது' என்றார்.

'ஐ. தே. கட்சியை இன்று திட்டும் தமிழர்கூட்டணியினர் ஐ. கே. கட்சி ஆட்சிக்காலத்தில் அமரர் திருச்செல்வம், அமரர் ஜி. ஜி. ஆகியோர் மந்திரிப்பதவிகளை ஏற்று செய்த அளப்பரிய சேவைகளை மறந்து விட்டனர். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையின்கீழ் ஐ. தே. கட்சி உருமாறியுள்ளது. ஜாதி, மத, இன-மொழி பேதங்களற்றஏழைகளின் ஜனநாயகக் கட்சியாக நவ ஐ. தே. கட்சி திகழ்கிறது. ஐ. தே. க. ஆட்சியில் லஞ்சம் ஊழல் ஆகியவற்றைக் களைந்து நாம்யாவரும் உரிமைகள்பெற்றுஒருதாய் மக்களாக வாழ ஐ. தே. கட்சியை தமிழ்மக்கள் ஆதரித்து ஐக்கியஇலங்கையை உருவாக்க வேண்டும் என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

பிரசாரக்குழுத் தலைவர் ஸ்ரீபதிநாதன், குப்பிளான் ஐ. தே. க. தலைவர் திரு. ப.சோமசுந்தரம், திருவாளர்கள் ஜெயரத்தினசிங்கம், எவ். ஏ. ரஞ்சன், ராஜ்மோகன், பஞ்சாட்சரதேவன், சூரியகுமார் ஆகியோரும் பேசினர். (உ)

**நாகம்ஸ்**
[சுன்னுகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
**அன்பைத்தேடி**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி — வாணிஸ்ரீ
**நிறைகுடம்**

**RIO** (Jaffna) Daily 4 Shows
BY POPULAR DEMAND
**KARATE AMAZONS**

**வெலிங்டன்** எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**தனிப்பிறவி**

**லிடோ** போன்: 7693 சிவகுமார் — ஜெய்சித்ரா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
**வெள்ளிக்கிழமை விரதம்**
(புதிய பிரதி)

**றீகல்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
**CRAZY BOYS MUSKETEERS**
குறும்புக்கார வாள் வீரர்கள்
Crazy Boys are back with the Musketeers to entertain you. Do join in their fun along with your kids.
குறும்புக்காரப் பையன்கள் உங்களை மகிழ்விக்க இங்கு வருகை தந்திருக்கிருர்கள். அவர்கள் செய்யும் அட்டகாசம் உங்களை வயிறுபுண்ணுகும் வரை சிரிக்க வைக்கும். அவர்களின் குறும்பில் நீங்களும் பங்குகொள்ளத் தவருதீர்கள்.

**ராணி** கமலஹாசன் -- தீபா - சாவித்திரி நடித்த
[யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
**அந்தரங்கம்**

**வின்ஸர்** கமலஹாசன் - ஸ்ரீவித்யா
[யாழ். நகர்] சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**அபூர்வ ராகங்கள்**

5-வது வெற்றி வாரம்!
**மனோகரா** எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி (இருவேடம்)
ஜெயலலிதா சுந்தரராஜன்
விஜயகுமார் கோபி கிருஷ்ணு
நடித்த
**பாட்டும்பரதமும்**

**ராஜா** [யாழ். நகர்]
ஸ்ரீகாந்த் - பிரமிளா
நாகேஷ் - லக்ஷ்மி (பசு)
தினசரி 4 காட்சிகள் நடித்த
**கோமாதா என் குலமாதா**
ஈஸ்மன் கலர் (புதியபிரதி)

# ராசதுரையை பொத்துவிலில் நிறுத்துமாறு கோரிக்கை

மட்டக்களப்பு செவ்வாய் கிழக்குமாகாணத்தில் தமிழரசுக்கட்சியை 20 வருடத்திற்கு முன்னர் வேரூன்றச் செய்தவரும், கட்சியின்மூத்த தலைவர்களில் ஒருவருமான மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. சி. இராசதுரையை பொத்துவில் தொகுதியில் நிறுத்துவதற்கான முயற்சிகள்நடைபெற்றுவருகிறது.

மட்டக்களப்புத் தொகுதியில் சிறைமீண்ட கவிஞர் காசி ஆனந்தனை தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகராக நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருவதனுல் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இரட்டை அங்கத்தவர் தொகுதியான பொத்துவிலில் திரு. சி. இராசதுரையை கூட்டணி அபேட்சகராக நிறுத்துமாறு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் பொத்துவில் தொகுதியில் உள்ள பலரும் கூட்டணித் தலைமைப் பீடத்தைவற்புறுத்தியுள்ளனராம்.

இக்கோரிக்கைபற்றி யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 26-ம் தேதி நடைபெறவிருக்கும் கூட்டணி அபேட்சகர் தெரிவுக்குழுவில் முடிவுசெய்யப்படவிருக்கிறது.

# "33 நாடுகளில் வாழ்ந்தும் தமிழர்க்கொருநாடில்லை"

## கல்முனை வரவேற்பில் 'வண்ணை'

வவுணதீவு, செவ். வரலாற்று ஏடுகள் தமிழினம் ஒரு காலத்தில் பெருமை பெற்ற இனமாக வாழ்ந்ததெனக் கூறுகின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என பரந்த இலட்சியத்துடன் வாழ்ந்தனர். ஆயினும் தமக்கென ஒரு நாடு வேண்டும் என நினைக்கவில்லை. வஞ்சனையற்ற மனதினராய் வாழ்ந்த தமிழினம் ஏகாதிபத்திய நாடுகளினுல் சுரண்டப்பட்டு இன்று கள்ளத்தோணி என்றும், கலப்பு இனம் என்றும் அவல நிலையில் வாழ்கின்றனர். 33 நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தாலும்கூட தவிர, ஒரு நாட்டை ஆக்கிவைக்கவில்லை."

மேற்கண்டவாறு சிறையிலிருந்து விடுதலையான வண்ணை ஆனந்தன் தமக்கும், மாவை சேனதிராஜாவுக்கும் கல்முனையில் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் சிறப்புரையாற்றுகையில் கூறினர்.

கல்முனை பிரதான வீதியிலிருந்து வண்ணையும், மாவையும் அப்பகுதிஇளைஞர்களால்ஊர்வலமாகஅழைத்துவரப்பட்டனர்

வண்ணை ஆனந்தன் மேலும் கூறியதாவது:-

உலக வரலாற்றிலேயே இடம்பெருத இஸ்ரவேலர்கள் தமது இனத்தை ஒற்றுமை மூலம் கட்டியெழுப்பி தமக்கென ஒரு நாட்டை உருவாக்கியிருக்கிருர்கள். ஆனல் நீண்ட வரலாறு கொண்ட தமிழினம் ஒற்றுமை மூலமாக தமது இழந்த தமிழ் ஈழத்தை ஏன் மீண்டும் நிலை நிறுத்த முடியாது எனவும் வினவினர்.

மாவை சேனதிராஜாவும், நடேசானந்தனும் அங்கு உரையாற்றினர். (அ)



## தவக்கால நற்சிந்தனை

"மண்ணிலே பாவத்தினுல்
உதித்து வந்த பாவி நான்
மதலையான நாள் துலக்கி
வன்பிலே நடந்தநான்
கண்ணுலே செய்த பாவம்
எண்ணிலு முடியுமோ
காதோடைம் பொறிவினை
கணக்கினைக் கடந்ததே
புண்ணிய மனைத் துணைய
தேனுமற்ற வஞ்சகப்
புலையனுன பாவி நான்
புரிந்தரண்டகங்களாம்
எண்ணிறந்த கோடிபாவ
மும் பொறுத் தீடேற்ற
வென்
றேகனுக் குரைக்கவேணும்
ஏசுநாத சுவாமியே.'
(ஜெபமாலை)

இயேசுநாதர் சிலுவையிலே மரித்தார் என்பதற்காக நம் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிடும் என்று கருத முடியுமா? அப்படிக் கருதுவோமாயின் அது உண்மை மன்னிப்பாகக் கூடுமா? பாவமன்னிப்புக்கும் ஒரு வரையறை உண்டு என்பதை நாம் மறத்தல் கூடாது.

ஒரு குடும்பத் தலைவன் தன் மைந்தர்களை அழைத்து "இனி மேல் உங்கள் இஷ்டப்படி நடக்கலாம்; இதற்கு முன்னுல் நீங்கள் செய்த தவறுகளையெல்லாம் மன்னித்துவிட்டேன். இனி எல்லாத் தவறுகளும் மன்னிக்கப் படும்'' என்று சொல்லிவிடுவானேயானுல், அந்தக் குடும்பத்தின் எதிர்காலம் என்னவாகும் என்பதைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள்.

"கிறிஸ்துநாதர் நமக்காகச் சிலுவையிலே உயிர் நீத்தார். அதன் காரணமாக நாம் செய்கிற பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டன'' என்று நாம் நினைத்தால் நம்மை விடப் பைத்தியக்காரர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. "நான் படும் வேதனைகளைப் பார்த்தாவது, சிலுவையிலே ஆணிகளால் அடிக்கப்பட்டு தொங்கிக்கொண்டிருக்கும் எனது துன்பக் காட்சியைக் கண்டாவது, இனிமேல் பாவம் என்பதைச் செய்யாதீர்கள்'' என்று நமக்குச் சொல்லாமலே சொல்லிவைத்தார் கிறிஸ்துநாதர்.

— ஞானஒளி

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-தேவிகா
**அன்புக் கரங்கள்**

## கப்பம்...

1ம் பக்கத் தொடர்ச்சி

கூறியதாவது:-

அவசரகாலச் சட்டங்கள் அரசுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பை நல்கும் பொருட்டு அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருக்கையில் அவற்றை நீர் (எதிரி) உமது நலனுக்காக பாவித்திருக்கிறீர். பொதுமக்கள், பொலிஸ் சேவையில் ஸவத்துள்ள நம்பிக்கைக்கு விரோதமாக நடந்திருக்கிறீர்.

இந்த விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்களைப்பார்க்கும் போது பொலிஸ் அதிகாரி திரு. பேட்டர்ஸ் பெரேராவே இந்த சோதனையை நடாத்த உத்தரவு பிறப்பித்திருக்கிருர். ஆனுல் அவர் உமக்காக கோட்டில் வந்து சாட்சியமளிக்காதது சந்தேகத்தையளிக்கிறது.

எதிரி நடந்துகொண்டவிதத்திற்கு அளிக்கப்படும் தண்டனை, உம்மைப் போன்று சேவையில் வேறுயாரும் இருப்பின் இது அவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கவேண்டும்.

தீர்ப்புக்கான முழுக்காரணங்களும், இம்மாதம் 11-ம் திகதிக்கு முன்னதாக அச்சடிக்கப்பட்டு, பதிவேட்டில் பதியப்படவேண்டும் என்று சுருக்கெழுத்தாளருக்கு நீதவான் கட்டளையிட்டார்.

எதிரி சார்பில்சட்டத்தரணிகளான ஏ. சி. டி. சொய்ஸா, எஸ். பெர்னுண்டோ, ஏ. அன்ரனி, பி. யூ. ஏ. குணதாசா ஆகியோர் ஆஜரானுர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினுர்.

### எஸ். பீக்கு பாராட்டு

இவ் வழக்கின் முறைப்பாடு தொடர்பாக, எடுக்கப்பட்ட உடன் நடவடிக்கைக்காக பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை நீதவான் பாராட்டினுர்.

எதிரி பொலிஸ் சேவையில் இருந்தும், இல்லாத ஒருவராக கருதி ஆகவேண்டிய நடவடிக்கைகளை பொது மக்கள் நலன் கருதி திரு. சுந்தரலிங்கம் செய்துள்ளதாகவும் நீதவான் தெரிவித்தார். (க-ஆ)

## சங்கங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுறவு காரியாலயத்திலும் சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர ப. நோ. கூ. சங்கத்திலிருந்து இன்று காலை 8 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகிறது.

கச்சேரியில் அரசாங்க அதிபர் காரியாலயத்தில் சத்தியாக்கிரகம் செய்தபின்னர், அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு மீண்டும் புறப்பட்டு பிரதான வீதி வழியாக யாழ். வீரசிங்கம் மண்டபவாசலை வந்தடைந்து அங்கு கூட்டுறவு காரியாலயத்தில் சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்திருப்பதாக சம்மேளன யாழ். நகர கிளை செயலாளர் திரு. லட்சுமி பூபதி தெரிவித்தார்,

### பொது வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இம் மாதம் 13-ம் திகதி காலை 9 மணிக்கு இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளன வடபிராந்திய பொதுச்சபைக் கூட்டம் திரு. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும், இக் கூட்டத்தில் சம்மேளன பொதுக் காரியதரிசி திரு. வீரசேன விஜயசுந்தரா உரை நிகழ்த்துவார்.

சங்கங்களின்சொந்தப் பிரச்னைகளை உள்ளடக்கிய பொது வேலைநிறுத்தம் ஒன்றை நடத்துவது பற்றி இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கிறது. (க-ஆ)

......

## சுவிஸ்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து வாழவென முஸ்லிம்கள் விரும்பினுல் அப்படி அவர்கள் பிரிந்து செல்வதற்கும் உரிமை அளிக்கப்படும். எவருடனும் சேராமல் தாங்கள் தனியாகவே பிரிந்து வாழ விரும்பினுலும் அவர்களுக்கு அந்த உரிமை இருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் தொகுதிகளிலும் புத்தளத்திலும் வேட்பாளர்களை முஸ்லிம் ஐக்கிய முன்னணியே தெரிவுசெய்யும்.

**ஈழநாடு சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)
(தினசரி - வாரமலர் உட்பட)

3 மாதம் ரூ. 47-00
6 மாதம் ரூ. 94-00
1 வருடம் ரூ. 188-00

# ஈழநாடு
EELANADU

**ஈழநாடு சந்தா**
(ஆள் மூலம் விநியோகம்)
(யாழ்- மாநகரசபை எல்லைக்குள்)
(தினசரி-வாரமலர் உட்பட)

3 மாதம் ரூ. 37-50
6 மாதம் ரூ. 75-00
1 வருடம் ரூ. 150-00

# இந்திராவை வீழ்த்த தமிழ் நாடு ஒன்றே போதும்
## சென்னையில் ஜெகஜீவன்

சென்னை, மார்ச், 8

தமிழ் நாட்டில் ஜனதா-தி. மு. க கூட்டணி 40 தொகுதிகளிலுலும் வெற்றி பெறும் என்று திரு. முரசொலிமாறன் உறுதியாககூறியிருக்கிறார் நாற்பதுக்கு நாற்பது கொடுத்தால் அதுவே திருமதி இந்திரா காந்தியை பதவியிலிருந்து இறக்குவதற்குப் போதுமானது.

இவ்வாறு காங்கிரஸ்ஜனநாயகக்கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்

திரு. ஜெகஜீவன்ராம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த மாதம் 1-ம் திகதி முதல் நெருக்கடி நிலையை நீக்கவேண்டும் என்று நான் பிரதமரிடம் கூறினேன். நெருக்கடி நிலை நீடிப்பதற்கான காரணங்கள் எதுவுமில்லை என்றும் இதுபோன் நடவடிக்கை உலகில் தங்களது மதிப்பை உயர்த்தும் என்றும் நான் பிரதமருக்கு எடுத்துக் கூறினேன்.

### என்மீது சந்தேகம்

எத்தகைய அறிவுரை கொடுத்தாலும் அந்த அறிவுரை என்னிடமிருந்து செல்கின்றபோது சந்தேகிக்கிறார்கள். நெருக்கடி நிலையை நீடிக்க தமக்கு விருப்பமில்லை என்பதை பிரதமர் காட்டிக்கொண்டதால் அத்தகைய அரசுடன் தொடர்ப்பு கொள்வது எனக்குக் கடினமாக இருந்தது.

மறுநாள் அரசியலில் இருக்க விரும்பாத நான் எனது ராஜினாமாவைச் சமர்ப்பித்தேன்.

### பிரதமருக்கு கோபம்

பிரதமர் இன்று கோபத்தில் பேசுகிறார். கோபத்தில் நிதானத்தை இழந்து விட்டார். அவரது அறிக்கைகளும் பேச்சுக்களும் முன்னுக்குப்பின் முரணாகை உள்ளது.

### பிரதமர் தோற்கடிக்கப்படுவார்

ராய்பரேலி தொகுதியில் பிரதமருக்கு எதிராக அடக்க முடியாத உணர்வுமிக்க திரு. ராஜ்நாராயண் போட்டியிடுகிறார். அங்குள்ள நிலையை நோக்கும் போது பிரதமர் தோற்கடிக்கப்படுவார் என்றே எண்ணவேண்டி உள்ளது.

மறைந்த தலைவர் திரு. ராஜாஜியின்மகன் திரு.சி.ஆர் நரசிம்மன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். (இ)

## பாக். தேர்தல..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்யப்பட்டுள்ளது. நேற்று அங்கு ஓரிடத்தில் நடந்த கலவரங்களில் 8பேர் கொல்லப்பட்டர் என்றும் 130 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இத்தேர்தலில் போட்டியிட்ட 700 அபேட்சர்களில் ஒரே ஒரு பெண்மணியான மக்கள்கட்சியைச் சேர்ந்த பேகம் நஷீம் கானும் வெற்றிபெற்றுள்ளார் (இ)

## ராஜகோபுரம்

சங்கானை' செள்வாய்

சங்கானைவெல்வில் முருகமூர்திகோவிலில் இராஜ கோபுரம்ஒன்று அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. இதற்குச் சுமார் ஒரு லட்சம் ரூபாவரை செலவாகலாம் என கோபுரஅமைப்பு குழு உறுப்பினர்ஒருவர் தெரிவித்தார். (உ)

## முதலாவது ஆண்டு நினைவுஅஞ்சலி



**திருமதி கமலாதேவி இராசசுந்தரம்**
(இளைப்பாறியஆசிரியை. சென். சாள்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 20-11-1934
மறைவு: 9-3-1976

எம்மையெல்லாம் மீளாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனோடு ஐக்கியமாகிக் கொண்ட எமது அன்புத் தெய்வமே உமது பிரிவு என்னையும் பிள்ளைகளையும் ஆழாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டது. இன்றுடன் நீர் எம்மைப் பிரிந்து ஓராண்டு நினைவு கூரும் இவ்வேளையில் உமது ஆத்மா சாந்தியடைய நானும், பிள்ளைகளும், தாயாரும், சகோதரரும், மாமன், மாமி மற்றும் சுற்றத்தாரும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தகவல்: கணவன்
**இ. இராசசுந்தரம்**
பிள்ளைகள்:
**இ. இரவிச்சந்திரன்**
**இ. குகசாந்தினி**
**இ. இரவிசேகரன்**
வீல்வளை,
மாதகல். 5634

## மதிமுகராசா வழக்கு
# நீதிமன்றம் வராத சாட்சிகளுக்கு வாரண்ட்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலத்தின் மெய்ப்பாது காப்பாளரை பயமுறுத்தியதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சாட்சிகளுக்கு நேற்று வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதவான் கே. நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலத்தின் மெய்ப்பாதுகாப்பாளரை துப்பாக்கி காட்டி பயமுறுத்தியதாக தமிழ் இளைஞர் பேரவை நல்லூர்த் தொகுதி அமைப்பாளர் பொன். மதிமுகராசாவுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில்சட்டத்தரணி ஆர். விஸ்வநாதனும், சட்டத்தரணி வெ. யோகேஸ்வரனும் ஆஜரானார்கள்.

எதிரி நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் எதிரி பக்கத்தில் தாம் விசாரணைக்குத் தயார் என்று நீதவானிடம் தெரிவித்தார்.

பொலிசார் சாட்சிகளை அழைத்தபோது சாட்சிகளும் முறைப்பாட்டுக் காரரும் நீதிமன்றத்திற்கு வரவில்லை.

சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் வேண்டுமென்றே எதிரிக்கு அவமானத்தை ஏற்படுத்துவதற்கே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி 2 தடவை றிமாண்டில் வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

நீதவான் சாட்சிகளுக்கு வாரண்ட் பிறப்பித்து விசாரணையை இம்மாதம் 29-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்

# மலைநாட்டுச் சிறுவர்கள் வடக்கில் விற்பனையாம்
## ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், புதன்

மலைநாட்டுப் பகுதியிலிருந்து சிறுபிள்ளைகளைக் கூட்டி வந்து யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்துவரும் ஒருவர் அண்மையில் அரியாலையில் வைத்து இரண்டு மலைநாட்டுப் பிள்ளைகளுடன் கைதுசெய்யப் பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரால் விற்பனை செய்யப்பட்ட இரண்டு பிள்ளைகள் வேலணையில் உள்ள ஒரு வீட்டிலிருந்து மீட்கப்பட்டனர்.

யாழ். சிறு குற்றத்தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. பெரமுனவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்தப் பிள்ளைகளை விற்பனை செய்யும் நாடகம் அம்பலமானது. (இ)

## கோரிக்கைகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களில் ஒருவரான திரு. ஜோர்ஜ் டீவாஸ் தலைமையில் நடைபெற்றது.

இயக்க அலுவல்களில் முழுநேர ஊழியர்களாக இயங்குபவர்களுக்கே எதிர்வரும் பொதுத்தேர்தலில் அபேட்சகக நியமனம் வழங்குவதெனவும், இந்தஅடிப்படையிலேயே நியமனம் வழங்கப்படல் வேண்டுமெனவும் மற்றுமொரு தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தேர்தல் விஞ்ஞாபனத்தின் முக்கிய சில பகுதிகளை நடவடிக்கைக்குழு ஆராய்ந்தபின், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் அங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்த பின்பு இம்மாதம் 26ம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள த. வி. கூட்டணி தலைமைக் காரியாலயத்தில் காலை நடைபெறவிருக்கும் விசேஷநடவடிக்கைக்குழு கூட்டத்தில் அங்கீகரிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம்.பி.திரு.கா.பொ. இரத்தினம், மட்டுநகர் முதல்வர் திரு.செ.இராசதுரை உடுவில் எம்பி.திரு.வி.தர்மலிங்கம், மூதூர் இரணடாவதுஎம். பி.திரு.அ.தங்கத்துரை, சாவகச்சேரி எம்.பி.திரு.வ.ந.நவரெத்தினம் ஆகியோரும் மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியைச்சேர்ந்த திரு. இரா.அம்பலவாணர், சட்டத்தரணி திரு.சாம்.தம்பிமுத்து செயல் அதிபர்களான திரு.மு. சிவசிதம்பரம், திரு.அ.அமிர்தலிங்கம், மகளிர் பேரவைத் தலைவி திருமதிமங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

## செம்மணி தீர்ப்பு விபரம் நாளை இதழில்

செம்மணி துப்பாக்கிச் சூட்டில் பலியான பொன்னம்பலம் பரராசாவின் மரண விசாரணை தீர்ப்பு நாளை வெளிவரும். (க-அ)

## நவாலி ம. வி. இவர்களின் மாற்றம் ரத்து!

யாழ்ப்பாணம், புதன்

நவாலி மகாவித்தியாலயத்திலிருந்து அண்மையில் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட அதிபர் திருமதி எஸ். ஆறுமுகராஜா, தலைமை ஆசிரியர் திரு. வி. சரவணமுத்து, உதவி ஆசிரியை திருமதி சி. இராஜரத்தினம் ஆகியோரின் இடமாற்றங்கள் கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்ற விசேஷ உத்தரவின் மீது ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பாடசாலையின் வளர்ச்சியில் அதிபரும், இதர ஆசிரியர்களும் அயராது உழைத்து வந்தனரென்றும் இவர்களது இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் நேரில் சமர்ப்பித்திருந்த கோரிக்கை மீது இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்படுவது சம்பந்தமான அறிவிப்புக்கடிதம் நேற்று அதிபர் திருமதி ஆறுமுகராசாவிடம் நேரில்கையளிக்கப்பட்டது

## ஸ்தோத்திர ஆராதனை

மறுமையெய்திய,
**திருமதி பூமணி நல்லையா**
**திரு. V. நல்லையா**
**திரு. I.H.A அழகரத்தினம்**

ஆகியோரின் வாழ்க்கைக்காவுகம் ஊழியத்துக்காவுகம் இறைவனை ஸ்தோத்திரிக்கும் ஆராதனை, சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை ஆலயத்தில் 1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 12-ம் திகதி (12-03-1977) காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

உறவினரும், நண்பரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

ஈசநிகேதன் எலியேசர் வளவு
சாவகச்சேரி.

5629

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தார் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49. Jaffna. Telegram: Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.